THAMILARUVY

# தமிழருவி

தமிழருவி

அருவி 39 | சதம் 75 | யூன் 1993

# கொழும்பிலும் தமிழகத்திலும் விடுதலைப் புலிகள்!

## அரசுகள் அச்சம்!

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் அரச படையினரின் அடாவடித்தனங்கள்! ஒரே இரவில் 500 தமிழ் இளைஞர்கள் கைது!

அடையாள அட்டை இல்லாதோரை கைது செய்து விசாரிக்க உத்தரவு!

விடுதலைப் புலிகள் விவகாரம் தமிழகத்தைப் படுத்தும் பாடு!

சவான் — ஜெயலலிதா மோதல்!

விபரம் 38 ம் பக்கம்



## தப்பியோடியவர்!

சென்னை சைதாப்பேட்டை சிறையிலிருந்து மர்மமான முறையில் தப்பியோடிய, ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய சாட்சியான சார்ள்ஸ் நவாஸ் (வயது 28) விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய புள்ளி என்று தற்போது தெரியவந்திருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் செய்திவெளியிட்டுள்ளன. சார்ள்ஸ் தப்பியோடிய விவகாரம் ஜெயலலிதா அரசுக்கு பெரும் பிரச்சினைகளை உருவாக்கிவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

— விபரம் 38 ம் பக்கம் —

## உள்ளே

Δ தற்போதைய இலங்கை ஆட்சியாளர் பின்னணியில் செயற்படும் J.R!
Δ பிரேமதாசாவின் கதை...!
Δ ஸ்ரீலங்காவில் பதவிக்கு வரத்துடிக்கும் திருமதிகள்!
Δ அபுதாபியில் இலங்கைப் பெண்ணின் சடலம்!
Δ சிறுகதை — சிறப்புக் கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருவி

அகில உலக தமிழனின்
கருத்தையும் கணிப்பையும்
எண்ணத்தையும் எழுச்சியையும்
ஆக்கத்தையும் ஊக்கத்தையும்
கனடாவில் தருவதற்கு
அருவி ஒரு கருவி!

தரமான உங்கள்
ஆக்கங்கள் பிரசுரமாகும்

**THAMILARUVI**

**Published by**
Thamilaruvi Publications
F.P.P.O
P.O. BOX 45501
747 DONMILLS ROAD
DONMILLS
ONTARIO
M3C 3S4

**ISSN No.**
1234 - 5678

**தமிழருவியுடனான உங்கள் தொடர்புகட்கு**
**292 - 1290**


வீரசுதந்திரம் வேண்டிநின்றோர் பின்னர்
வெறொன்று கொள்வாரோ — என்றும்
ஆரமுதுண்ணுதற் காசை கொண்டோர் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ



## அருவியின் பார்வையில்

# முயன்றாலும் மறைக்கமுடியாத உண்மைகள்

இலங்கை ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க இலங்கை இனப்பிரச்சினைக்கு தீாவுகாணவேண்டிய உடனடி அவசியத்தை முதன்மைப்படுத்தி கருத்துக்கள் வெளியிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த யாராவது உதவுவார்களேயானால் அது மகத்தான செயலாகக்கணிக்கப்படும் எனவும் ஜனாதிபதி கண்டியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் பற்றியும் — அதன் தலைவர் பிரபாகரன் பற்றியும், பதவிக்கு வந்த சில தினங்களிலேயே தடுமாற்றமான பல அறிக்கைகளைவிட்டுள்ள ஜனாதிபதி டிங்கரி விஜயதுங்க, ஒரு உண்மையை தெளிவாக உணருகின்றார். அதாவது இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டுமென்பதே!

இதை இன்றைய ஜனாதிபதி மட்டுமல்ல... முன்னாள் ஜனாதிபதிகளும் உணர்ந்துதான் இருந்தார்கள். யதார்த்தம் எது என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கவில்லை.

நரிக்குணம் கொண்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனாவாகவிருந்தாலும் சரி, சந்தர்ப்பவாத அரசியல் நடாத்திய பிரேமதாசாவாகவிருந்தாலும் சரி எல்லோரும் அறிந்துதான் வைத்திருந்தார்கள்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு என்றும் — தொண்டமான் என்றும் காலத்தை இழுத்தடித்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு, சரியான அணுகுமுறை என்ன என்பதே தெரியவில்லை.

நாட்டின் முதன்மையான இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சரியான தீர்வுத் திட்டத்தையே தரமுடியாத இவர்களெல்லாம் ஜனாதிபதிகளாகவிருக்கத் தகுதியற்றவர்கள்!

மிகவும் கேலிக்கூத்தான செய்கை என்னவென்றால்... இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக இதுவரையும் ஆட்சியிலிருக்கும் ஐ.தே.க. ஒரு தீர்வுத்திட்டத்தை வெளிப்படுத்தாததே!

புதிய ஜனாதிபதியாவது இலங்கையின் தற்போதைய சூழ்நிலைகளை மனதிற்கொண்டு, ஆக்கபூர்வமான இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை வெளிப்படுத்துவாரா?

தீவிலுள்ள சம்பந்தப்பட்ட இரண்டு அரசாங்கங்களும் பேச்சுவார்த்தை நடாத்துவதன்மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியுமே தவிர... பார்வையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன்மூலம் எதுவுமே நடைபெறப்போவதில்லை என்பதை புதிய ஜனாதிபதி தெளிவாக உணர்ந்துகொள்வார் என எண்ணுகின்றோம்.


பேர்க்டேல் பிளாஸாவில் யாழ்நகர் ரேடர்ஸ் நிலையத்தினுள்

**சுமி ஜுவலர்ஸ்**

நங்கையர் நாடும் நகைகள் — மங்கையர் சூடும் ஆபரணங்கள் — உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் டிசைன்கள் — கண்ணைப் பறிக்கும் தங்கச் சங்கிலிகள் — காப்பு வளையல்கள் — மோதிரங்களுக்கு

22 Karat Custom Made & Singapore Jewellery

**SUMI JEWELLERS**

புதிய டிசைன்களில் சிங்கப்பூர் நகைகள்

**1241 ELLESMERE ROAD**
**SCARBOROUGH, ONT.M1P 2X8**
**Tel. 750 - 1983**

**KAVITHAS**

எவர்சில்வர் பாத்திரங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுதுணிகள், சேர்ட் வகைகள், கண்களைக் கவரும் காஞ்சிபுரம், மைசூர் சில்க் மற்றும் நூல் சேலைகள், புடவைகள், போட்டோ பிரதிச் சேவை, FAX சேவை, இன்னும் எத்தனையோ நியாயமான விலையில்!!!

**EXPRESS MONEY TRANSFER**

துரித பணமாற்றுச் சேவை

கனடா கொழும்பு சிங்கப்பூர் தென் இந்தியா முழுவதும்

கவிதாஸ்

**1241 ELLESMERE ROAD**
**SCARBOROUGH, ONT. M1P 2X8**
**Tel/Fax (416) 755 - 6560**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவி வாசகர்களுக்கு ஆசிரியரின் அன்புமடல்!

வணக்கங்கள் பல!

'தமிழருவி' கடந்த மாத இதழ் வெளிவராமல் போனதையிட்டு வருந்துகின்றோம்.

ஏன் 'தமிழருவி' வெளிவரவில்லை என்று துடிப்போடு எம்முடன் தொடர்புகொண்டவர்கள். வேதனை கொண்டவர்கள் பலர். தரமான தமிழருவி வெளிவராமல்போனதையிட்டு வருந்தியவர்கள் பலர்.

தமிழருவி கடந்தமாதம் வெளிவராததற்கு காரணங்கள் உண்டு. தவிர்க்கமுடியாத காரணங்கள். அவற்றை விரிவுபடுத்தி நொண்டிச் சாட்டுகளை வாசகர்கள் மத்தியில் விதைப்பதற்கு நாம் விரும்பவில்லை. முயலவில்லை. கடந்த மாத இதழ் வெளிவராமல் போனதையிட்டு நாம் வருந்துகின்றோம் வாசகர்கள் மன்னிப்பார்களாக!

இந்த இதழ் சற்றுவித்தியாசமான அமைப்பில் இருப்பதையிட்டு நிச்சயமாக உங்கள் நெஞ்சங்களில் கேள்விக்கணைகள் தோன்றும். காரணமுண்டு!

யூன் மாதம் 1991 ம் ஆண்டு அரம்பிக்கப்பட்ட 'தமிழருவி'க்கு இம்மாதம் மூன்றாவது வயது! இதன் காரணமாக இவ்விதழ் சற்று வித்தியாசமானதாகவிருக்கட்டும் என்பதற்காகவே இத்தோற்றம்! இவைபற்றியும் உங்கள் அபிப்பிராயத்தை எழுதுங்கள்.

நேற்றுமுன்தினம் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி டிங்கிரி விஜயதுங்க கொழும்பில் கூட்டமொன்றில் உரையாற்றும்போது. புதிய அரசாங்கம் பதவியேற்ற போது இருந்த பதற்றமான சூழ்நிலையிலும்... நாட்டில் சட்டம் — ஒழுங்கு ஆகியனவற்றை நிலைநாட்டி மாகாண சபைத் தேர்தலை ஸ்ரீலங்காவில் நடத்தியதே அரசாங்கத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றியெனக் குறிப்பிட்டுள்ளார்!

ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் கூற்றுப்படி... நாட்டின் வடக்கு — கிழக்கு மாகாணங்களை ஸ்ரீலங்காவின் பகுதிகளாக அவர் எண்ணவில்லை என்பதையே அவரது பேச்சு எடுத்துக்காட்டுகின்றது. அவரது உள்ளத்தில் மறைந்திருந்த உண்மைகள் வார்த்தைகளாகச் சிதறியுள்ளன. இக்கருத்துப்பற்றி விசேட கட்டுரையொன்றை எமது அடுத்த இதழில் எதிர்பாக்கலாம்.

## Thamilaruvi Business Card Directory 1993




SunLife of Canada

M.N.Raja
Life Underwriter

245 Fairview Mall Dr. 2nd. Floor
Willowdale ON M2J 4T1

Tel: 493-9560 Res: 496-1558
Fax: 493-9399

• Life • Group • Mortgage • Annuity • RRSP • Disability


## Sunlife ல் இருந்து திரு. எம்.என். ராஜா கூறுகின்றார்

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு.

வணக்கம்.

கனடாவாழ் தமிழர்களின் மத்தியில் வளர்ந்துவரும் தொழில் ஸ்தாபனங்களை மக்களின் பார்வைக்கு கொண்டுவரும் முயற்சியில் நீங்கள் வெளிப்படுத்தியுள்ள கைக்கடக்கமான புத்தகம் பலவகையிலும் பயன்பட்டு உங்கள் முயற்சிக்கு பாராட்டும் ஆதரவும் நிச்சயம் கிடைக்குமென்பது என் அசைக்கமுடியாத நம்பிக்கை. இந்த உங்கள் முயற்சிக்கு எனது ஆதரவையும் பாராட்டடையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அன்புள்ள —

M.N. Raja




# ஸ்ரீநிவாஸ் நிலையம்



ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள்
சர்வன் ஐயா

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான வைபவங்களுக்கு தேவையான மணவறை — பந்தல் அலங்காரம் — பூமாலைகள் — சடைநாகம் — தலைப்பாகை — தலைநகை — பூஜைக்குரிய பொருட்கள் அனைத்தையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

திருமணம் — புண்யாகவாசனம் — திவசம் — புதுக்கடைத் திறப்புவிழா — வீடுகுடிபுகுதல் — நவக்கிரகசாந்தி — பூப்புனித நீராட்டுவிழா அனைத்தும் வேதாகம விதிகளுக்கு அமைய செய்துதரப்படும்.

Tel: (416) 472 - 1939 / (416) 472 - 1844




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமதாசாவின் கதை



முன்னாள் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா கடந்த அக்டோபர் மாதம் 1 ம் திகதி தனது துணைவியாருடன் இந்தியா சென்றிருந்த சமயம் ராஷ்டிரபவானில் அளிக்கப்பட்ட விருந்துபசாரம் ஒன்றில் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா — பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ஆகியோருடன் காணப்படுகின்றார்.

சாமான்யக் குடும்பத்தில் பிறந்து ஒரு நாட்டின் தலைமைப் பதவிக்கு தமது கடும் உழைப்பால் உயர்ந்த உலகத் தலைவர்களில் படுகொலை செய்யப்பட்ட பிரேமதாசாவும் ஒருவர்.

தனது உயர்வுக்காக — பதவிக்காக எதனையும் செய்யத் தயாராகவிருந்த இவரின் பின்னணி உண்மைகள் இதுவரையும், அவரது பதவியின் அச்சம் காரணமாக மூடி மறைக்கப்பட்டிருந்தன. இவரது படுகொலையைத் தொடர்ந்து பல உண்மைகள் இலங்கை மக்களை... ஏன் உலக மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையில் இடம்பெற்ற பல கொலைச் சம்பவங்களுக்கு இவரே காரணம் எனச் சுண்டு விரலை உயர்த்தியவர்களின் விரல்கள் நறுக்கப்பட்டன...!

புருவங்களை உயர்த்தியவர்களின்... இமைகள் வழிக்கப்பட்டன...!

தான் ஒரு சலவைத் தொழிலாளி குடும்பத்தில் பிறந்தவர் என்பதை பிரேமதாசா பொது மேடைகளில் அறிவித்து அதன்மூலம் சாதாரண மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்.

கொழும்பு நகரின் ஏழை மக்கள் அதிகமாக வாழும் சென். செபாஸ்தியான் பகுதியில்தான் அவரது சொந்த இல்லம் உள்ளது. அந்த வீட்டில்தான் அவர் தமது ஆதரவாளர்களை பெரும்பாலும் சந்திப்பார்.

1924 ம் ஆண்டு ஜூன் மாதம் 23 ம் திகதி பிறந்த அவர் முறையான ஆரம்பக்கல்வியைக்கூடப் பெறமுடியவில்லை. புத்த பிக்குகளிடம்தான் அவரது கல்வி ஆரம்பமானது.

கொழும்பில் அவர் நடுநிலைப்பள்ளியில் படித்த காலத்தில் காலையில் தாயார் சுட்டுத்தரும் இடியப்பத்தை குறிப்பிட்ட இடங்களுக்குக் கொண்டு சென்று விற்றுவிட்டுத்தான் அவர் படிக்கச் செல்வார். அதனால் அவரை 'லெவரியா பாய்' என்று சின்ன வயதில் குறிப்பிடுவார்களாம். லெவரியா என்பது இடியப்பத்துக்குள் இனிப்புப் பூரணம் வைத்துச் செய்யப்படும் ஒரு தின்பண்டமாகும்.

பணக்காரர்கள் கட்சி என்று கருதப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சியில் முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவினால் கவரப்பட்டு அக்கட்சியில் சேர்ந்தார். அவர் அக்கட்சியில் சேர்ந்த பிறகுதான் சாமான்ய குடும்பத்து இளைஞர் — இளம் பெண்களும் அக்கட்சியில் சேரத் துவங்கியதாகக் கூறுவார்கள்.

1960 களில் கொழும்பு மாநகரசபை உறுப்பினராகி அவர் அரசியலில் நுழைந்தார். பின்னர் துணை மேயராகவும் — மேயராகவும் பதவி உயர்ந்தார்.

மூன்று அங்கத்தவர் தொகுதியான மத்திய கொழும்பின் முதலாவது எம்.பி. யாக தமிழ் மக்களின் பெருவாரியான ஆதரவால் தொடர்ந்து வெற்றிபெற்றார்.

1966 ல் தமிழர் ஐக்கிய முன்னணியையும் சேர்த்துக்கொண்டு ஐக்கிய தேசியக்கட்சி தேசிய அரசு அமைத்தபோது உள்ளாட்சித் துறை துணை அமைச்சரானார். 1969 ல் தமிழர் கட்சி அரசில் இருந்து விலகிக்கொண்டதும் உள்ளாட்சித் துறை அமைச்சராகவிருந்த மு. திருச்செல்வத்திற்குப் பதிலாக அமைச்சரானார். 1970 ல் ஐக்கிய தேசியக்கட்சி தோற்றதும் அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை எதிர்த்து நாடெங்கும் பிரசாரம் செய்வதில் முன்னணி வகித்தார். தமிழ் — சிங்களம் — ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் மேடையில் சரளமாகப் பேசுவார்.

1977 ல் ஜயவர்த்தனா தலைமையில் மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சி அரசு அமைத்தபோது மீண்டும் உள்ளாட்சித்துறை அமைச்சரானார். அடுத்த ஆண்டே புதிய அரசியல் சட்டத்தின்படி ஜயவர்த்தனா நாட்டின் அதிபராகப் பதவி ஏற்றதும் பிரேமதாசாவுக்கு பிரதமர் பதவியும் தரப்பட்டது.

ஜெயவர்த்தனாவின் வலது கரமாகத் திகழ்ந்து வந்த பிரேமதாசா... நாளடைவில் மறைமுகமாக ஜெயவர்த்தனாவுக்கெதிராக செயற்பட ஆரம்பித்தார்.

குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து 1987 ல் இந்திய அரசுடன் ஜயவர்த்தனா ஒப்பந்தம் செய்துகொண்டபோது அதனை எதிர்த்தவர். ஒப்பந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொள்ள 1987 ஜுலையில் ராஜீவ் காந்தி கொழும்புக்கு வந்திருந்த சமயம் அவரை வரவேற்கக்கூட அவர் வரவில்லை எனபது குறிப்பிடத்தக்கது.

ஜெயவர்த்தனாவுக்கு அடுத்த நிலையில் பிரேமதாசா இருந்த போதிலும் 1989 ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய முறையில் இளைஞர்களான லலித் அத்துலத் முதலியையும் — காமினி திசநாயகாவை யும் ஜெயவர்த்தனா தயார் செய்தது பிரேமதாசாவுக்குப் பிடிக்கவில்லை. நீங்கள் போட்டியிடாவிட்டால் வேறு யார் போட்டியிட்டாலும் நானும் அப்பதவிக்குப் போட்டியிடுவேன் என பிரேமதாசா மிரட்டியதால் ஜெயவர்த்தனா அவருக்கு விட்டுக்கொடுத்தார். ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசா வெற்றிபெற ஜெயவர்த்தனா — அதுலத் முதலி — காமினி திசநாயக்கா ஆகிய மூவரும் முனைப்புடன் பாடுபட்டனர்.

ஜனாதிபதி வேட்பாளராக அவரை அப்போது லலித் முன்மொழிந்தார். காமினி வழிமொழிந்தார். இருவரும் தங்களுக்குப் பிரதமர் பதவி கிடைக்கும் என்று நம்பினர். ஆனால் பிரேமதாசா டிங்கிரி விஜயதுங்காவை பிரதமராகவும் நிதியமைச்சராகவும் நியமித்து லலித்துக்கும் காமினிக்கும் அதிக முக்கியத்துவம் இல்லாத மந்திரி பதவிகளைக் கொடுத்தார்.

அதிபர் பிரேமதாசாவின் சில செயல்கள் பிடிக்காததால் அவருக்கு எதிராக காமினியும் — லலித்தும் வெளிப்படையாகவே செயற்படத் துவங்கினர். பிரேமதாசாவுக்கு எதிராக இரண்டாண்டுகளுக்கு முன் எதிர்க்கட்சிகள் கண்டனத் தீர்மானம் கொண்டுவரவும் இவர்கள் காரணமாக இருந்தனர்.

மிக ரகசியமாக நடந்த அக்காரியம் பிரேமதாசாவுக்குத் தெரியவரவே. அவர் லலித் — காமினி உள்ளிட்ட 8 அமைச்சர்கள் வேறு சில எம்.பி. க்களின் பதவியைப் பறித்துக்கொண்டு கட்சியை விட்டே வெளியேற்றினார்.

அதன் விளைவாக லலித்தும் — காமினியும் ஜனநாயக ஐக்கிய தேசியக்கட்சி என்ற பெயரில் கட்சி அமைத்து பிரேமதாசாவுக்கு எதிராகக் கிளம்பினர். அரசியலில் ஒதுங்கியிருக்கக்கூடாது என நினைத்து. லலித் கொழும்பு மாகாண சபை முதலமைச்சர் பதவிக்கும் — காமினி கண்டி மாகாணசபை முதலமைச்சர் பதவிக்கும் போட்டியிட்டனர்.

அதற்கிடையில் தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் லலித் சுட்டுக்கொல்லப்பட்டார். அக்கொலை நடந்து ஒரு வாரத்திற்குப் பின் மே முதலாம் திகதி பிரேமதாசாவும் நடுத்தெருவில் படுகொலை செய்யப்பட்டுவிட்டார். பிரேமதாசா தம்பதியினருக்கு திருமண வயதில் ஒரு

# பிரேமதாசா ராஜீவ் ஒற்றுமை




இரு அண்டை நாடுகளின் தலைவர்களாகத் திகழ்ந்த ராஜீவ் காந்தி. பிரேமதாசா இருவரும் கொல்லப்பட்ட சம்பவங்களில் சில அம்சங்கள் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன.

இந்த இருவரும் தற்கொலைப் படையைச் சேர்ந்த மனித குண்டின் செயல் காரணமாக மாண்டனர். தவிர... இருவரும் ஒரே மாதத்தில் மாண்டுள்ளனர். ராஜீவ் கொல்லப்பட்டது மே மாதம் 21 ம் திகதி. பிரேமதாசா மே மாதம் 1 ம் திகதியன்று கொல்லப்பட்டுள்ளார்.

பேரணி சமயத்தில்தான் இந்த இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். ஸ்ரீ பெரும்புதூர் தேர்தல் பிரசாரக்கூட்டத்திற்குச் சென்றபோது ராஜீவ் பலியானார். மே தினப் பேரணிக்குத் தலைமை தாங்கி நடத்திச் சென்றபோது பிரேமதாசா பலியானார்.

ராஜீவ் கொலைச் சம்பவத்தில் புலிகள் சம்பந்தப்பட்டுள்ளார்களா எனபது கேள்விக்குறிபோலவே... பிரேமதாசா விஷயத்திலும் கேள்விக்குறி...?



# பிரேமதாசாவின் நீண்டகால ஆசை!

பிரேமதாசாவின் நீண்டகால விருப்பம் 15 நாட்களுக்கு முன்னர்தான் நிறைவேறியது.

வங்கதேச தலைநகர் டாக்காவில் 'சார்க்' நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு கொழும்பு திரும்பும் வழியில் ஏப்ரல் 15 ம் திகதி இந்தியாவில் நாகபுரியில் (மகாராஷ்டிரம்) உள்ள காந்திஜி வோகூரம் ஆசிரமத்திற்கு பிரேமதாசா விஜயம் செய்தார்.

காந்திஜியின் சிந்தனைகளில் தமக்கு ஆழ்ந்த ஈடுபாடு உள்ளதென்றும் ஆசிரமத்திற்குச் செல்லவேண்டும் என்று குழந்தைப் பருவத்திலிருந்தே விருப்பம் இருந்தது என்றும் ஆசிரமத்தில் அவர் சொன்னார்.

இந்தியாவில் இதுதான் அவர் கடைசியாகக் கலந்தகொண்ட பொது நிகழ்ச்சியாகும். இலங்கை அதிபராக ஆசிரமத்திற்கு வரவில்லை என்றும் அமைதி — அஹிம்சை ஆகியவற்றின் காவலரான காந்திஜியின் தொண்டன் என்ற முறையில் இங்கு வந்ததாகவும் தெரிவித்திருந்தாராம்.

காந்திஜியின் மருமகள் நிர்மலா பென் காந்தி. ஆசிரமத்தைச் சுற்றிக்காட்டினார் என்றும் அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளை மனம்......?

வல்லை கமலா பெரியதம்பி



அரிசியை ரைஸ் குக்கரில் போட்டுவிட்டு பிரிஜ்ஜைத் திறந்தாள் அன்ன பூரணி.

அவளது அனுபவப்பட்ட விழிகள் அன்றைய சமையலுக்கு மெனு ஒன்றைத் தயாரிக்க என்னென்ன காய்கறிகள் கைவச முள்ளன என்பதைக் கணக்கெடுக்க விழை ந்தன. அன்று வெள்ளக்கிழமையாகையால் டீப் பிரீசரில் இருப்பவற்றைப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

தாய்நாட்டில் தன்வீட்டில் தினமும் மரக்கறி உணவு வேண்டும் என்று தவிக்கும் தர்சனா இப்ப அவற்றைத் தவிர்க்க ஆரம்பித்துவிட்டாளே... அது யார் செய்த கன்ம வினையின் விளைவோ? அருமையாகப் பெற்றுவளர்த்த தன் மகள் இப்ப முற்றாக மாறிவிட்டதை எண்ணிப் பெருமூச்சுவிட்டாள் அன்னபூரணி. தன் விதியை நினைந்து நொந்து கொள்வதைத் தவிர வேறுவழியில்லை அந்தத் தாய்க்கு.

மரக்கறி லாச்சிகளில் ஒரு பாதி கோவாவும், இரண்டு தக்காளிப்பழங்களும், நாலு பாதி உலர்ந்த குடமிளகாய்களும் மட் டுமே இருந்தன. கனடாவில் கிடைக்காத காய்கறியா? கடைகளில் கண்ணைப்பறிக் கும் வகையில் பலவித வர்ணங்களில்தான் எத்தனை விதமான காய்கள்... கிழங்குகள்... தழைவகைகள்... குவிந்து கிடக்கின்றன!

ஆனால் தர்சனாவிற்கு அவற்றை வாங்க மனசிருந்தால்தானே? மாமிச வகை கள் மட்டும் வேண்டிய மட்டும் வாங்கு வாள். அன்னபூரணியின் நச்சரிப்பால் தான் ஒருசில தாவர உணவு வகைகளுக்கு மூக்கால் அழுது முனகிக்கொண்டே காசு கொடுப்பாள் அந்த அருமை மகள். மரும கனின் கொலஸ்ட்ரால் தொல்லைமட்டும் இல்லாவிட்டால் வீட்டில் வெள்ளி செவ்வா ய்களில் கூட சைவ உணவு இல்லை என்று ஆகியிருக்கும். எவ்வளவு சொல்லி எச்சரித்தும் என்ன? கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதிய கதைதான்!

அன்னபூரணியின் வற்றிய வளை க்கரங்கள் விறுவிறென்று இயங்கின. உரு ளைக்கிழங்கையும் கோவாவையும் வெட் டிப் பொடியாக நறுக்கினாள். குடமிளகாயின் குடலை உருவி எறிந்துவிட்டு சூரியகாந்தி நெய்யில் வதக்கித் தாளித்துக் குழம்பு வைத்தாள். மைசூர் பருப்பில் பால்கறி வைத்து அத்துடன் தக்காளி ரசம் ஒன்றைத் தயாரித்தாள். ரசத்தின் வாசனை நாசியைத் தொளைத்தது. பப்படம், வற்றல் மிளகாய் பொரியலோடு தயிரும் சேர்ந்தால் திவ்வியமான விருந்துதான்! இல்லா விட்டால் வேலையால் வரும் மகளும் மருமகனும் முணுமுணுக்காமல் சாப்பிடு வார்களா என்ன?

என்ன செய்தும் என்ன? ஒரு வார்த்தை நன்றி சொல்ல நாதியில்லையே! நன்றி உணர்வுதான் இல்லாவிட்டாலும் ஈன்றவள் என்ற பாசம் கூடவா இல்லாமல் போய்விடும்? நேற்று அவளது அந்த உற்ற உறவுகள் பேசியதைச் சற்று எண்ணி ப்பார்த்தாள் அன்னபூரணி.

"அந்த ரியல் எஸ்டேட் ஏஜன்ட் வீடு மலிவாக வாங்க இதுதான் ஏற்றகாலம் என்கிறான். அவன் அன்று வார்டன் பகு தியில் காட்டிய வீடும் நல்ல வசதியாகவும் வடிவாகவும்தான் இருக்கிறது. வாங்கி விட்டால் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் என்ன சொல்கி றீர்கள்...?" — என்று கேட்டாள் தர்சனா.

"அதற்கு டவுண் பேய்மென்ட் இருபது அளவில் கொடுக்கவேண்டும். நாம் இந்த சான்சை விட்டால் இதுபோல் ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக்காது. பிள்ளை களுக்கு பள்ளி செல்ல வசதி. எங்களுக்கும் வேலையிடம் நாலைந்து நிமிஷ நடையில் கிட்டிவிடும். போக்குவரத்துக்கும் பாங்கான ஏரியா. பெரிய ஷொப்பிங் மாலே அருகில் இருக்கிறது.

இதைவிட வேறு என்ன வேண் டும்? ஆனால் கையிருப்பில் இருப்பதுதான் கொஞ்சம் குறைவாக இருக்கிறதே என்று தான் யோசிக்கிறேன்..." — என்று இழித்தான் தினகரன்.

"அதைப்பற்றி யோசிக்காதீர்கள். அம்மாவின் நகையும் சேமிப்புத் தொகையும் இருக்குத்தானே? இந்தச் சந்தர்ப்பத்திற்கு உதவாத பணம் இருந்தென்ன போயென்ன? அம்மாவின் செலவும் எங்கள் கணக்கி ல்தானே செய்கிறோம். பிள்ளைகள் இரு வரின் செலவோடு எங்களுக்கு அது அதி கப்படி செலவுதான்.

ஆனால் என்ன செய்கிறது? ஸ்பொ ன்சர் செய்து அம்மாவைக் கூப்பிட்டால், கையைக் கடித்தாலும் அவவின் செலவும் நம் தலையில்தான் விழும் என்பதை நாம் அப்பவே யோசித்திருக்கவேண்டும். இப்ப பேசி என்ன புண்ணியம்?" — என்று சலித்துக்கொண்டாள் தர்சனா. பக்கத்தில் இருக்கும் தாயைப் பற்றி சற்றேனும் சிந்திக்கவேண்டுமே என்று தோன்றவில்லை அந்த மகளுக்கு. அவ்வீட்டிலிருந்த கதிரை, மேசை போல அந்த அன்னையும் ஒரு அகறிணைப் பொருளாகத் தோன்றியிருக்க வேண்டும் அவளுக்கு!

வீடு வாங்கி, சாமான்களை ஏற்றி இறக்கி... அடுக்கி ஒழுங்குபடுத்தி முடிப்பத ற்குள்... அன்னபூரணி பாடு பெரும்பாடுதான்! அன்றைய நாள்வரை நோய் நொடி என்று ஒரு நாளேனும் படுத்தறியாத அந்த சிறந்த மனையாளுக்கு வாழ்க்கையே 'சீ' என்று ஆகிவிட்டது.

மகள் தனது மனையின் மேல் பகுதியில் உள்ள மூன்று அறைகளில் தன க்கும், பிள்ளைகளுக்கும் இடம் தேடிக்கொ ண்டாள். பேஸ்மெண்டில் உள்ள ஒரு சின்ன அறையில்தான் அன்னபூரணி சிறைவைக்க ப்பட்டாள். சமையல் வேலைக்குச் சாமான்க ளைப் பொறுக்கி எடுக்கவும், வைக்கவும் அவள்அன்றாடம் அடிக்கடி மேலும் கீழும் ஏறி இறங்கியதில் அவளுக்கு அரை உயிரே போய்விட்டது!

பாவம்! ஊரில் பனிக்காலம் என் றாலே பிடிக்காமல் தடித்த கம்பளியால் போர்த் திக்கொண்டு படுக்கும் அன்னபூரணி... கனடா வின் கடுங்குளிரினால் நடுநடுங்கினாள். பகலில் தாம் இருவரும் வேலைக்குப்போகும்போது தர்சனா தாட்சண்யமின்றி ஹீட்டரை நிறுத்திவிட்டுப் போய்விடுவாள்.

தாய்தான் பிள்ளைகளைப் பள்ளிக்குக் கூட்டிச்செல்லவேண்டும். மளிகைச் சாமான்க ளைக்கூட அவள்தான் அரை மைல்தூரம் நடையாய் நடந்து வாங்கிச் சுமந்து வரவேண்டும்.

அவளின் பெற்ற மனம் மகள் மீது கொண்ட பெரும் பாசத்தால் தன் தேகம் இறுக்கிப்போகும் வரை சற்றும் சளைக்க வில்லை. எதையும் தாங்கும் பக்குவமுள்ள அந்தத் தாயின் இதயம், இந்நாட்டு நடுங்கும் குளிரை மட்டும் தாங்கமுடியாது தவித்தது. இருந்தும் இயல்பான அவளது இனிய சுபாவம் தன் மகளை முனிந்து சாபமிட மனமின்றி நடமாட வைத்தது. ஒரு நாள் வழியில் தடுமாறி விழப்போனவளை தடுத்து அணைத்துக்கொண்டாள் வழியில் சந்தித்த ஒரு தமிழ் மங்கை.

அன்று...

தாயில்லா பெண்ணான பத்மினிக்கு பத்துவயதில் செத்துப்போன தாயைக்க ண்டாற்போல் ஒரு பிரமை உண்டாயிற்று. மிகப்பரிவுடன் அன்ன பூரணியை ஒரு டாக்சியில் ஏற்றிப் பத்திரமாக வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து சேர்த்தாள் பத்மினி. பருவப்பாவையான பத்மினி அவ்வீட்டின் 'சில்' என்ற சூழ்நிலையைத் தாங்கமுடியாமல் அவதிப்பட்டாள். ஆச்சர்யம் தாங்காமல், "ஏன் அன்ட்டி ஹீட்டரைப் போட மறந்துவிட்டீர்களா?" என்று குற்றம் சாட்டும் குரலில் இரைந்தவாறு கேட்டாள் பத்மினி. அதற்கு அன்ன பூரணியால் உடனடியாக எந்த பதிலையும் சொல்லமுடியவில்லை.

"இல்லையம்மா... இந்த வீட்டை வாங்கியதால் எங்களுக்குத் தலைக்கு மேல் கடன். அதனால் யுட்டிலிட்டுச் செலவைக் குறைக்க நான்தான் ஹீட்டரைப்போடவேண்டாம் என்று என் மகளைத் தடுத்தேன்" என்று தயங்கியவாறு கூறினாள் அன்னபூரணி.

"ஓகோ...! இது உங்கள் மகளின் வேலையா?" என்று தனக்குள் சொல்லிக்கொண்ட பத்மினி அந்தப் பரிதாபத்திற்குரிய தாயைப் பரிவுடன் பார்த்தாள். மகளை விட்டுக்கொடுக்க மனமின்றி அப்பட்டமாக அத்தாய் கூறிய பொய்யைக்கேட்டு உள்ளம் நெகிழ்ந்தவாறு 'அப்படியா...' என்று ஒப்புக்குக் கூறினாள்.

அதன்பின் மிக ஆதரவுடன் பேச்சுக்கொடுத்து பத்மினி அன்ன பூரணியைப்பற்றிய அத்தனை விபரங்களையும் சேகரித்துக்கொண்டாள்.

"அன்ட்டி... நான் ஏதோ ஆண்டவன் புண்ணியத்தால் கைநிறையச் சம்பாதிக்கின்றேன். என் கையிருப்பின் பலத்தால் இதேபோல் ஒரு வீட்டையும் வாங்கி என் தம்பியுடன் வசிக்கின்றேன்.

அடுத்த தெருவில்தான் என் வீடு இருக்கிறது. மூன்று அறைகளில் ஒன்று காலியாகவிருக்கிறது. உங்களைப்போல் ஒரு அன்புத்தாய் இருந்தால் நான் எத்தனை சந்தோஷப்படுவேன்? எ.ஸி. வசதி இருப்பதால் 'வெதர்' எம்மை வீட்டிற்குள் பாதிப்பதில்லை. நாளைமுதல் நீங்கள் பேரப்பிள்ளைகளோடு பள்ளி செல்லும்போது நானும் கூடவே வருகின்றேன். சுயமாகத் தொழில் செய்வதால் எனக்குப் பகலில் நிறைய ஓய்வு உண்டு. உங்களுக்கு ஷொப்பிங் செய்யவும் சாமான்களைத் தூக்கவும் உதவ எனக்கு சந்தர்ப்பம் தருவீர்களா?" என்று உருக்கமாகக் கேட்டாள்.

கரும்பு தின்னக் கூலியா என்ன? அன்னபூரணிக்கு பத்மினி சாதாரண பெண்ணாகத் தோன்றவில்லை. பராசக்தியே அவள் முன் பிரத்தியட்சமாகத் தோன்றினாற்போல் ஒரு பிரமை. அன்றிலிருந்து அன்னபூரணி ஒரு அசாதாரண உணர்வுடன் இயங்கினாள். அன்புக்கு ஏங்கிய அந்தப்பேதைக்கு அன்பின் ஊற்றாகத் திகழ்ந்தாள் பத்மினி.

"அம்மா பத்மினி... உங்கள் அறிமுகம் கிடைக்க நான் என்ன தவம் செய்தேனோ? ஒருவேளை முற்பிறவித் தொடரால்தான் எங்களுக்குள் இந்தத்தொடர்பு உண்டானதோ...! யார் கண்டார்கள்? எத்தனை கோடி இருந்தாலும் என்ன? அன்பு காட்ட மனிதர் இல்லா





தவர்கள் இரக்கத்திற்குரிய அனாதைகள்தான். ஆதரவான ஒரு சொல்லுக்கும் அரவணைக்கும் ஒரு அன்புக் கரத்திற்கு ஏங்கித் தவித்த எனக்கு, நான் கை எடுத்த தெயவம்தான் உங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது" — என்று நன்றி ததும்பக்கூறினாள் பெறாத அந்தத்தாய்.

ஆயினும்... இப்புதிய உறவைப் பற்றித் தெரிந்தால் தன் மகள் பொறுக்கமாட்டாளே என்று அவள் நெஞ்சம் குறுகுறுக்கத்தான் செய்தது. நொந்த உள்ளத்திற்குத் தான் அந்த உறவு தெம்பைத் தந்ததே தவிர நலிந்து போன அவளது உடல் உருகிக்கொண்டே வந்தது. இருமலும் இளைப்பும் அன்னபூரணியின் ஆரோக்கியத்தை அரித்துப் பிடுங்கின. வின்ட்டரின் வெறித்தனமான சூறைக்காற்றுகளும், போராகக்குவியும் பனிக்குவியல்களும், சறுக்கி விழ வைக்கும் உறைபனித் தூறல்களும்... அந்தோ பாவம்...! அன்னபூரணியின் அங்கங்களை வீட்டிலும் வெளியிலும் விறைக்கச் செய்தன. இதன் விளைவாக இரண்டாம் தடவையும் இற்றுப்போன அவளது தேகம் அறிவற்றுப்போகவே அடியற்ற மரம்போல் வீழ்ந்தது. பத்மினி பதறிப்போய் பெறாத அந்த அன்னையை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றாள்.

செய்திகேட்டுத் தர்சனா தாயை ஆஸ்பத்திரியில்போய் பார்த்தாள். பத்மினியின் பேரழகைக் கண்டதும் பொறாமைத் தீயால் வெந்துதான் போனாள் ஒரு கணம். இருந்தாலும் எவ்வாறோ சமாளித்துக்கொண்டு உள்ளம் அழுக்காறால் அனல் பூத்துக் கருக, உதட்டால் மட்டும் தட்டுத் தடுமாறி நன்றி கூறினாள். ஆஸ்பத்திரியால் திரும்பிய அன்னபூரணிக்கு... பழையபடி வேதாளம் முருக்க மரம் ஏறிய கதையாகவே எதிர்காலம் அமைந்தது.

பத்மினி தன் தாயின் உடல்நிலை குறித்து கவலைப்படுவதையும், தொலைபேசி மூலம் அடிக்கடி விசாரிப்பதையும் தர்சனா அடியோடு வெறுத்தாள். மறைமுகமான மனையின் வெப்ப நிலையை சீராக்கும்படி பத்மினி பவ்வியமான முறையில்கேட்டு... பல தடவைகள் எடுத்த முயற்சிகள் யாவும் விழலுக்கு இறைத்த நீராயின.

அன்னபூரணி அவலமான குளிர் உபாதை தாங்காமல் தர்சனாவை வாய்விட்டுக்கேட்டும் அந்தக் கிராதகியின் நெஞ்சம் கொஞ்சமும் இரங்கவில்லை. அதன் விளைவாக... வயதானோர் விடுதியில் தாயைச் சேர்க்க அவள் விழைந்த செய்தி அறிந்து பத்மினி வலிய வீடுதேடி வந்து பலதடவை அன்னபூரணிக்காககப் போராடிப்பார்த்தாள். தர்சனாவோ தயவு தாட்சண்யம் காட்டாமல் விட்டதுடன் நில்லாமல், வெறிநாய்போல சொல்லால் அந்த நல்லிதயம் படைத்த நங்கையை அடிக்கவும் துணிந்துவிட்டாள். "என் அம்மாமீது எனக்கில்லாத பாசம் உமக்கேன் பொங்கி வழியவேண்டும்? நான் இதை நம்ப அப்படி ஒரு இளிச்சவாய் என்று நினைக்கவேண்டாம். நீர் இங்கு அடிக்கடி வருவது ஏன் என்று எனக்குத் தெரியாதா? உம்மைப்போல் கல்யாணம் இல்லாமல் கண்டபடி திரிபவர்கள் அடுத்தவளின் புருஷனுக்கு வலைவிருத்து குடும்பங்களைக் கெடுப்பதில் கெட்டிக்காரிகள்தான்! என்னைப் பெற்ற தாயை எனக்குப் பார்க்கத் தெரியும். நீர் இனி ஒரு வார்த்தை பேசினால் பொலிசைக்கூப்பிடுவேன்.!" — என்று மிரட்டினாள் மகள். அத்துடன் அவளது ஆத்திரம் அடங்காமல் போகவே 911 இலக்கத்தை அடித்தே விட்டாள்!

அடுத்த நிமிஷம் பொலிஸ் ஆபிசர்கள் அவ்வீட்டிற்குள் படையெடுத்தனர்.

"ஐயா... என் தாயை இழந்து தவிக்கும் எனக்குத்தான் இந்த அம்மாவின் அருமை தெரியும். அவ ஒரு வார்த்தை சொன்னால் நான் என் வீட்டில் வைத்து அவவின் காலம் உள்ளவரை ஆதரவுடன் பாதுகாப்பும் அளிப்பேன். வயதானோர் விடுதியில் சேர்க்கும் இந்தக் கொடுமையை என்னால் சகிக்கமுடியவில்லை." — என்று அழுதாள் பத்மினி. அன்னபூரணி அகங்கனிந்து அந்தப் பெறாத மகளைப் பார்த்தாள்.

பின்னர்... அன்றே ஒரு முடிவுக்கும் வந்தாள். பாசம் இல்லாத உறவை வீசி எறிந்துவிட்டு தன் நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு அந்த இல்லத்திலிருந்து வெளியேறினாள்.

**விடுதலை பெற்ற அந்த முதிய தாய்ப் பறவை புதிய உறவைத் தேடிச் சிறகடித்துப் பறந்தது!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்ரி குறோசரி

Markham Plaza - 1221 Markham Road - # 13A - Scarborough

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப்பொருட்கள், மரக்கறி, பால், பழ வகைகள், கடலுணவுப்பொருட்கள் என்பனவற்றுடன் உங்கள் அன்றாடத்தேவைகளை குறைந்த செலவுடன் பூர்த்திசெய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

எல்ஸ்மெயர் — மார்க்கம் சந்திப்பில்! Tuxedo Court க்கு அருகாமையில்!!

உடன் இறைச்சி கடலுணவு வகைகள்

## MULTI GROCERY

MARKHAM PLAZA
1221 MARKHAM ROAD
UNIT # 13A
SCARBOROUGH
(MARKHAM & ELLESMERE)

**TEL / FAX (416) 438 - 3499**



# PRASHAN AUDIO & VIDEO

தமிழ் — சிங்களம் — மலையாளம் — இந்தி ஆகியவற்றின் தரமான வீடியோப்பிரதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

நீங்கள் விரும்பும் தமிழ்த் திரைப்படப் பாடல்களின் தரமான ஒலிப்பதிவு நாடாக்கள், லேசர் இசைத்தட்டுக்கள், என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

Audio - Video - C.D. & Electronic Items - Video Transfer - Any System to any System

Markham & Ellesmere சந்திப்பில் அமைந்துள்ள வீடியோ நிலையம்

***பணமாற்றுச் சேவை***

துரிதமான — நம்பிக்கையான பணமாற்றுச் சேவைக்கு எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
சென்னை — கொழும்பு — வவுனியா

வீடியோ பிரதி மாற்றும் செய்துகொள்வதற்கும் மற்றும் இலத்திரனியல் (எலெக்ரோனிக்) பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

## PRASHAN AUDIO & VIDEO

**MARKHAM PLAZA**
**1221 MARKHAM ROAD**
**UNIT # 13A - SCARBOROUGH**
**TEL: (416) 439 - 5030**



# ELECTRON AUTO SERVICE



எந்த ரகமான உங்கள் வாகனங்களின் சகலவிதமான திருத்த வேலைகளையும் நீதியான கட்டணத்தில் செய்துகொள்வதற்கு எம்மை நாடுங்கள்.

Engine Tune - Ups, Breaks, Exhaust System, Electrical & Electronic Problems for all kind of vehicles

## FOR QUALITY USED CARS

**25 Heritage Rd., # 14**
**Mc Gowan / Highway 7**
**(On Mc Gowan)**
**Tel: 472 - 8343 / 921 - 8005 (Erai)**
**Mobile Tel: 399 - 1830**



# AUTO REPAIR CENTRE

## பொறிநுட்பம்

## PORINUDPAM

*பெற்றோல், டீசல் வாகனங்களிற்கான சகலவிதமான இயந்திர மின்சார திருத்த வேலைகள்.*

*வாகனங்களிற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல் (Vehicles Inspected & Certified)*

*Alternators & Starting Motors Rebuilt செய்யப்பட்டு நியாயமான விலையில் விற்பனை செய்தல்*

*இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் (Japan, Germany) உள்ளூர் வாகனங்களின் நிபுணத்துவம்.*

*Electronic Engine Tune-Ups*


**435 BOWES RD. #5CONCORD, ONT.**
**TEL:**
**(416) 738-8360**

— கனடாவில் தமிழர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட மூத்த நிறுவனம் —




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் குண்டு வெடிப்பு!



உலகின் மிக அனுபவம் வாய்ந்த ஐ.ஆர்.ஏ. கொரில்லாக்கள் லண்டன் வர்த்தகப் பகுதியில் பல குண்டுகளை வெடிக்கச் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் காயமடைந்தனர். முதலில் வெடித்த குண்டினாலேயே இச்சேதம் ஏற்பட்டது. இதற்கு 14 மணி நேரத்திற்குப் பின் மற்றும் இரு குண்டுகள் வெடித்தன.

வட அயர்லாந்திலிருந்து பிரிட்டனை அகற்றப்போராடிவரும் ஐ.ஆர்.ஏ கொரில்லாக்கள் உலகின் கவனத்தை உடன் ஈர்க்கும் சக்திவாய்ந்தவர்கள்.

உலகிற்கு வேதாந்தம் கதைத்து, தத்துவம் பேசும் பிரித்தானியா விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு அய—ர்லாந்துப் பிரச்சினையை அணுகாதது வேதனைகலந்த வியப்பாகும். நடந்த குண்டுவெடிப்பை அவதானித்தபடி பிரித்தானிய சிப்பாய் ஒருவர் அமர்ந்திருப்பதை மேலேயுள்ள படம் எடுத்துக்காட்டுகின்றது. ஐ.ஆர்.ஏ. க்கள் தங்கள் போராட்டத்தில் துப்பாக்கி — சிறிய பெரிய குண்டுகள் — செம் டைக்ஸ் உயர் அழுத்த வெடிகள் ஆகியனவற்றையே கூடுதலாக உபயோகித்துவருகின்றனர்.

லண்டன் பொருளாதார மாவட்டத்தில் இடம்பெற்ற பெரும் குண்டினால் இரு வங்கிக் காரியாலயங்கள் பெரும் சேதமுற்றன. 156 கோடி டாலருக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கிழக்கையும் மேற்கையும் சேர்ந்த 3000 நிதி அதிகாரிகள் — வங்கியாளர்கள் — வர்த்தகர்கள் ஆகியோர் நடத்திய கூட்டமும் இதனால் குழம்பியது.

மேலும் பல தொலைபேசி மிரட்டல்கள் லண்டன் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CITY ★ STAR
## Driving School

*சாரதியப்பயிற்சி வழங்குவதில் தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம்.*



*நவீன தன்னியக்க குளிரூட்டப்பட்ட ஊர்திகளில் பயிற்சி*
*அரசாங்க வீதிப்பரீட்சைக்கு வாகன ஒழுங்குகள்*
*காலை, மாலை, மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்கள்*
*காப்புறுதி ஒழுங்குகளும் ஏற்பாடுகளும்*
*உங்கள் சொந்த மொழியிலேயே பயிற்சிகள், தொடர்புகள், நடவடிக்கைகள் அனைத்தும்.*


**வாகனம் செலுத்துவதில் எந்த விதமான அனுபவமும் இல்லாதவர்களும் குறைந்த செலவுடன் நிறைந்த பயிற்சியை பெற்றுக் கொள்ளவும் குறுகிய காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும் இன்றே நாடுங்கள்**

**எஸ். சிவா**
**490-6450**



**சிற்றி ஸ்ரார்**
**▪ DRIVING SCHOOL ▪**

**முக்கிய அறிவித்தல்!**



Standard வாகனங்களில் தங்கள் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்!

---

## செஞ்சிலுவை சங்க பேராதரவுடன் மிட்லண்ட் கல்லூரி தமிழ் மாணவர் அமைப்பு வழங்கும்

# இளம் மாலைத் தென்றல்

முத்தமிழ் கலைகளுடன் மற்றும் ரொரன்ரோவில் இசைமணம் பரப்பும் "சுருதி இசைக்குழுவினரின்" இன்னிசை மழையும் உங்களை வரவேற்கவுள்ளது.

எங்களது தாயகத்தின் வறுமையின் கொடுமையிலும் துன்பத்தின் பிடியிலும் வாழ்வை ஓட்டிக்கொண்டிருக்கும் மக்களின் புதிய புத்துயர்ச்சிக்கு எமது கல்லூரி மாணவ, மாணவிகள் மனமுவந்து வழங்கும் இப்புத்தாண்டின் புதிய படைப்பு

நேரம் — பிற்பகல் 6.00 மணிக்கு (சனிக்கிழமை)
காலம் — June 5 th. 1993
இடம் — மிட்லண்ட் கல்லூரி அரங்கம்
**720 Midland Avenue (Eglinton & Midland)**
உங்களது நன்கொடைகள் எமது தாயகத்தின் வளர்ச்சிகள். (நன்கொடை $ 5.00)
பிரவேசச் சீட்டுகளை அனைத்துத் தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானிலும் தீண்டாமைத் தீ!

## ரோக்கியோவில் 10000 பேர் ஆர்ப்பாட்டம்!

ஜப்பானில் 'புராகுமின்' என்ற பிரிவைச் சேர்ந்த முப்பது லட்சம் பேர் வசிக்கின்றார்கள். இவர்களை ஜப்பானிய மக்கள் தீண்டத் தகாதவர்களாக நடத்துகின்றார்கள். இந்தக் கொடுமையை எதிர்த்து டோக்கியோ நகரிலுள்ள மெய்ஜி பூங்காவில் 10000 பேர் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

ஜப்பானில் பின்பற்றப்படும் தீண்டாமைக்குச் சாதியோ — மதமோ — இனமோ காரணமல்ல. அவர்கள் செய்யும் தொழிலே காரணம். 300 ஆண்டுகளுக்கு முன்பு ஜப்பானிய பேரரசரின் கீழ் நால்வகைத் தொழில்களைப் புரிவோர் இருந்தனர். வீரர்கள் — விவசாயிகள் — கலைஞர்கள் — வியாபாரிகள் என்ற நால்வகைத் தொழில் புரிவோருக்குக் கீழாக 'புரோகுமின்' இருந்தனர். ஆடு, மாடுகளை வெட்டி மாமிசம் எடுப்பது, பிணங்களை எரிப்பது, பிராணிகளின் தோலை உரிப்பது, போன்ற தொழில்களை 'புரோகுமின்கள்' செய்து வந்தனர். 1615 ம் ஆண்டில் இவர்களைத் தீண்டத் தகாதவர்களாக அறிவிக்கும் உத்தரவு நிறைவேற்றப்பட்டது.

18 ம் நூற்றாண்டில் வாழ்ந்த நிலச்சுவான்தார்கள் புரோகுமின்களை மிகவும் மோசமாக நடத்தினர். 1871 ம் ஆண்டில் நிலப்பிரபுத்துவ முறை ஒழிக்கப்பட்டவுடன் புரோகுமின்களுக்கு விமோசனம் ஏற்பட்டுவிட்டதாக அரசு அறிவித்தது. ஆனால் செயல்முறையிலோ இன்றுவரை தீண்டாமை நீடித்துவருகின்றது. அவர்களைத் திருமணம் செய்துகொள்ள ஏனைய ஜப்பானியர் விரும்புவதில்லை. திருமணத்திற்கு முன்பாக புரோகுமின் பிரிவைச் சேர்ந்தவரா... இல்லையா என்பதைத் தீவிரமாக விசாரித்தபின்னரே பெண் கொடுப்பதோ — பெண் எடுப்பதோ நடைபெறுகின்றது.

புரோகுமின்கள் தனிப்பேட்டைகளில் வசிக்கின்றனர். இவர்களை 'எடா' (அசுத்தம்) என்றும் அழைக்கின்றனர். இந்தப் பிரிவைச் சேர்ந்தோர் ஏனைய பிரிவினரின் வீட்டு வாசல்படியை மிதிக்கக்கூட அனுமதிக்கப்படுவதில்லை.

கம்யூட்டரில் தகவல்!

புரோகுமின்கள் யார்? அவர்கள் எங்கு வசிக்கின்றனர் என்ற விபரங்களை கம்யூட்டரில் கூடப் பட்டியல் போட்டு மற்றவர்களுக்குத் தகவலை அளிக்கின்றனர். வேலைவாய்ப்பில் அவர்களுக்கு இடம் கிடைக்காமல் செய்ய சிலர் செய்கிற வேலையிது.

<u>தீண்டாமைக்கு எதிராக சினிமா!</u>

ஜப்பானியர் சமூகம் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் என்று நம்பும் தற்கால இளைஞர்களுக்கு 'புரோகுமின்கள்' விவகாரம் வேதனைதருகின்றது. ஆயினும் இந்தக் கொடுமையை களைந்தெறியும் துணிவு அவர்களுக்கில்லை. ஒரே ஒரு பெண்மணி இந்தக்கொடுமையை அகற்றும் பணியை இடைவிடாது செய்துவருகின்றார். அவரது பெயர் சூசுமி. 90 வயது. 'புரோகுமின்' வகுப்பில் பிறந்தவர் அல்லர் இவர். ஆயினும் இதுவரை அவர் படைத்த இலக்கியப் படைப்பெல்லாம் ஜப்பானிய தீண்டாமையை மையமாக வைத்துப் படைக்கப்பட்டுள்ளது.

அவர் எழுதிய ஆறு தொகுதிகளைக் கொண்ட நீண்ட நாவல் இப்பொழுது திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. அவர் இந்த நாவலை 1961 ம் ஆண்டு முதல் எழுதி வருகின்றார். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் நாவல் முடியவில்லை.இப்பொழுது ஏழாவது தொகுதியை எழுதிவருகின்றார். இதுவரை இந்த நாவல் 60 லட்சம் பிரதிகள் விற்பனையாகிவிட்டன!

திருமதி சூசுமியின் நாவலை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்படத்தின் பெயர் "பாலம் இல்லாத ஆறு" ( The River With no Bridge) இந்தத் திரைப்படம் வெளியிடப்பட்ட சில வாரங்களுக்குள் ஏழு லட்சம்பேர் பார்த்துவிட்டனர். இது இன்றைய ஜப்பானிய இளைஞரின் மனச் சாட்சியைத் தட்டி எழுப்பிவருகின்றது. அநீதியை எதிர்த்துப் போராடவேண்டும் என்ற உணர்வினை ஊட்டுகின்றது.

'புரோகுமின்' பிரிவைச் சேர்ந்த ஓர் இளம் பெண், தனது வயிற்றில் பிறக்கப்போகும் குழந்தையும் தீண்டத்தகாததாகிக் கஷ்டப்படும் என்று அஞ்சுகிறாள். பின்னர் அவள் திருமணம் செய்துகொள்ள இசைவு தெரிவிக்கையில், அவளுடைய வருங்காலக் கணவன் சிறைத் தண்டனை பெறுகின்றார். தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து ஒரு சங்கம் தொடக்கிய 'குற்றத்திற்காக' இந்தத் தண்டனை விதிக்கப்படுகின்றது.

இறுதியில் அந்தச் சங்கத்தின் சட்டதிட்டங்களைக்கூறும் பிரகடனத்தையே கணவனாக நினைத்துக்கொண்டு அதற்கு முன் நின்று அவள் திருமணம் செய்துகொள்கின்றாள்.

அந்தப் பிரகடனத்தில் உள்ளத்தை உருக்கும் வாசகங்கள் உள்ளன. கல் நெஞ்சினையும் கரைத்துவிடும் வாசகங்களுடன் படம் முடிகிறது.

இந்தக் கதையை எழுதிய எழுத்தாளர், <u>"மனித குலத்தின் மடமைக்கு எதிரான எனது போராட்டத்தை இறுதி மூச்சுவரை தொடருவேன்"</u> — என்று கூறுகிறார்.

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமோ?

**காசு** துரிதமாக நம்பிக்கையுடன் அனுப்ப
**காசி**ப்பிள்ளையுடன் 267 — 8221 இல் தொடர்புகொள்ளுங்கள்

*** வவுனியா * மட்டக்களப்பு * கொழும்பு (சுற்றுப் புறங்கள்) * சிலாபம் * நீர்கொழும்பு * சிங்கப்பூர் * சென்னை**

33 ஆண்டுகள் வவுனியாவில் பிரபல்யம் பெற்ற மு. காசிப்பிள்ளை சக புத்திரர்களின் ஸ்தாபனத்தின் முன்னைநாள் உரிமையாளர், மு. காசிப்பிள்ளையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
M. Kasippilai & Sons, Inc.

3228, Eglinton Ave. E. Suit 3,
Scarborough, Ontario m1J 2H6
Tel: (416) 267 - 8221



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதெப்பிடியிருக்கு

## 1

"துப்பாக்கி கலாசாரத்தின் உச்சக்கட்டத்தையே இன்று நாடு எதிர்நோக்கியுள்ளது. நாட்டின் ஜனாதிபதிக்கே பாதுகாப்பு இல்லையென்றால் எமது நாட்டின் பாதுகாப்பை நாம் என்னவென்று கூறுவது? மேற்படி கொலைகார அரசியலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதை நாம் வெறுக்கின்றோம். இந்த துப்பாக்கி கலாசாரத்திற்கு உடனடியாக முடிவுகட்டியாகவேண்டும். இல்லையேல் நாட்டின் ஜனநாயகமே குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடும்"

— இவ்வாறு ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கே.பி. சில்வா இரத்தினபுரியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

கே.பி. சில்வா தற்பொழுதுதான் நித்திரையால் எழும்பியிருக்கின்றார் போற் தெரிகின்றது! ஏனய்யா இந்தப் பாசாங்கு...! துப்பாக்கி கலாசாரத்தின் உச்சக்கட்டத்தையே இன்று நாடு எதிர்நோக்குவதாக குறிப்பிட்டுள்ளீர்களே... இக்கலாசாரத்தின் உச்சக்கட்டத்திற்கு நாடு வந்து ஆண்டுகள் பலவாகிவிட்டனவே... பயங்கரவாதத்திற்குப் பணிந்து குனிந்து அரசியல் நடத்தும் உங்களை எவ்வாறுதான் அழைப்பது? இன்று நாடு அவலநிலைக்கு வந்ததற்கு உங்கள் பங்கும் நிறைய உண்டு என்பதை பூசி மெழுக முயற்சிக்கின்றீர்கள். கம்யூனிஸ்டுகள் என்ற போர்வையில் அரசியல் நடத்தும் உங்களை இனவாதிகள் என என்றோ நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

## 2

"தென் கிழக்காசியாவிலேயே சிறந்த ஒரு நூல் நிலையமாக விளங்கியது யாழ்ப்பாணத்திலிருந்த நூல் நிலையமாகும். 95000 புத்தகங்களை உள்ளடக்கியிருந்த அந்த நூல் நிலையத்தை ஒரு தீக்குச்சியால் அழித்தொழித்தவர்களும் இன்று ஜனநாயகம் பற்றிப்பேச முன்வந்திருப்பது பெரும் வியப்பை அளிக்கின்றது"

— இவ்வாறு கூறியுள்ளார் இலங்கை மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஓஸி அபயகுணசேகரா.

காமினி திசநாயக்காவைத்தான் இவர் விழித்துப் பேசுவது புரிகிறது. யூ.என்.பி யுடன் இன்று கூட்டுவைத்துள்ள ஓசி அபயகுணசேகரா அவர்கள்... நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழ் வாக்காளர்களை கவரும் நோக்கில் பேசிய பேச்சு என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளபோதும்... மக்கள் மத்தியிலிருந்து பேள்விக்கணையொன்று எழுகின்றது...!

யாழ். நூல் நிலையத்தை காமினி எரிக்கும்போது... அவர் யூ.என்.பி. யில்தான் இருந்தார். இன்று நீங்களும் அதே யு.என்.பி. யுடன்தான் கூட்டுவைத்துள்ளீர்கள் என்பதை மறந்துவிட்டீர்களே ஓஸி ஐயா...!

## இலங்கைப் பிரதமர் ரணில்!



## 3

கொள்கைகள் இல்லாத சுதந்திரக்கட்சியை மக்கள் ஏன் ஆதரிக்கவேண்டும்? ஐ.தே.கட்சியில் தலைமைத்துவம் இருக்கின்றது. அதேபோன்று சிறந்த கொள்கையும் இருக்கின்றது. அந்த கொள்கைமூலம் நாட்டை எமது அரசு பரிபாலிக்கிறது. கொள்கை இல்லாதவர்களுக்கு வாக்களிப்பதால் எந்தவித நன்மையும் இல்லை. தென்மாகாணத்திற்கு மென்மேலும் சேவை செய்வதற்கு மக்கள் கொள்கை உள்ள ஐ.தே.க. வை ஆதரிப்பதே சிறந்த வழிமுறையாகும். அதனை விட்டுவிட்டு கொள்கை இல்லாதவர்களை ஆதரிப்பதால் எந்தவித நன்மையும் ஏற்படப்போவதில்லை."

— இவ்வாறு இலங்கைப்பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார் —

சுதந்திரக்கட்சிக்குக் கொள்கை என்பது கிடையாதாம். ஐ.தே.க. வுக்கு நிறைந்த கொள்கைகள் உண்டாம். பாவம் பிரதமர்... மக்களை ஏமாற்ற ஆரம்பிக்கின்றார். இல்லாவிட்டால் எப்படித்தான் பிரதமராக இருக்கமுடியும்? ஐ.தே.க. வின் கொள்கைத் திட்டங்களை (இன அழிப்புக்கொள்கை தவிர) பட்டியல்போட்டுத் தரமுடியுமா? சரியான கொள்கைத் திட்டங்கள் இருந்திருந்தால் நாடு இன்று இந்த அவல நிலையில் இருக்குமா? மக்கள் துன்பச் சுமையை தாங்கமுடியாமல் தவிப்பார்களா? இன்று தலைவர்களுக்கு ஏற்பட்ட கதி ஏற்பட்டுத்தான் இருக்குமா? இனியாவது யு.என்.பி. சரியான கொள்கைத் திட்டங்களை ஏற்படுத்துமா? நாட்டு நலன் கருதி செயற்படுமா? ஆவன செய்வீர்களா புதிய பிரதமரே...! பெருந் தலைவர்களுக்கே இலங்கையில் பாதுகாப்பு இல்லாமல் இருக்கும்போது சாதாரண மக்களுக்கா பாதுகாப்பு உண்டு? இந்த அவல நிலையை புதிய பிரதமர் போக்குவார் என நம்பலாம்...! சண்டித்தன அரசியல் நடத்திவந்த பழைய ஜனாதிபதியின் பாசறையில் புதிய பிரதமர் வளர்ந்திருந்தாலும் சிந்தனைக்கு இடம்கொடுத்து நாட்டுமக்களின் நன்மதிப்பைப்பெறுவார் என எதிர்பார்க்கலாம். தமிழர்களைப் பொறுத்தவரையில் பிரேமாவும் ஒன்றுதான்... ரணிலும் ஒன்றுதான்... சிறிமாவும் ஒன்றுதான்...எல்லாரும் ஒன்றுதான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதெப்பிடியிருக்கு



டாக்காவில் பிக் பாக்கட் அடித்த ஒருவரைப் பிடித்து வந்த மக்கள் உடனடித் தண்டனையாக அவரது தலைமுடியைத் துண்டித்தனர். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு!


## லிங்கனுக்கும் மகாத்மாவுக்கும் வந்த கேடு!



அண்ணல் மகாத்மா காந்தி. ஆபிரகாம் லிங்கன் போன்ற சிரேஷ்ட தலைவர்களில் ஒருவராக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி போற்றப்படவேண்டியவர் என்று இராஜாங்க அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

<u>அமைச்சர் ஏன்தான் இவ்வாறு பிரட்டுகின்றார்...!</u>

<u>மகாத்மாவும் லிங்கனும் பாவம் செய்த பிறவிகளாகிவிட்டார்களே!</u>



அமைச்சர் மேலும் கூறியதாவது —

நாட்டுக்காக — மக்களுக்காக ஜனநாயகத்திற்காக — சமூக நீதிக்காக சவால்களுக்கு முகம்கொடுத்து அந்த இலட்சியத்திற்காக இவ்வாறு தியாகம்புரிந்த மனித புருசர்கள் உலக வரலாற்றில் பிறப்பது அபூர்வம். எம்மிடம் வாழ்ந்த அந்த அபூர்வ மனிதன் கடந்த மே தினத்தில் எம்மிடமிருந்து மறைந்துவிட்டார். அவர் நடந்தவந்த பாதையில் தடைகள் — சவால்கள் — இடர்பாடுகள் எல்லாம் நிறைந்து காணப்பட்டபோதும் அவற்றையெல்லாம் கண்டு அவர் கலக்கம் கொள்ளவில்லை. ஆபிரகாம் லிங்கன் — அண்ணல் மகாத்மா காந்தி போன்றவர்களுக்கு நிகரானவர் காலஞ்சென்ற பெரும் தலைவர் பிரேமதாசா அவர்கள். அவர் கொள்கையை நாம் பின்பற்றவேவண்டும் என்கிறார் அமைச்சர்.


<u>" Srilanka's new goverment has disbanded the secret police force that the late president Ranasinghe Premadasa used to suppress his opponents." இவ்வாறு ரொரன்ரோ சன் பத்திரிகை அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளதை அமைச்சர் அறிவாரா?</u>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிக்காட்டு ராஜா வீரப்பன்!

## தலைக்கு விலை 40 இலட்சம்!



யார் இந்த வீரப்பன்?

இந்திய அரசு வீரப்பனைக் கைது செய்வதற்கு எடுத்துவரும் முயற்சிகள் எல்லாமே தோல்வியல் முடிவடைவதன் காரணம் என்ன?

கொலைகாரன் என்றும் — கடத்தல் மன்னன் என்றும் இந்திய அரசால் வர்ணிக்கப்படும் வீரப்பனை இந்திய அரசால் நெருங்க முடியாமல் இருக்கும் மர்மம் என்ன? இந்திய அரசுக்கு பெரும் சவாலாக இருக்கும் வீரப்பன். பொதுமக்களுடன் கருணையுள்ளத்துடன் பழகுகின்றானாம்!

இருப்பவர்களிடம் இருந்து பறித்து இல்லாதவர்களிடம் கொடுப்பதில் என்ன தவறு என்று கேட்கும் வீரப்பன் பல கொலைக்குற்றங்களுக்காகத் தேடப்பட்டுவருகின்றான்.

கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு அதிபதியாகவிருந்துவரும் வீரப்பனைச் சுற்றி பெரும் புள்ளிகளே இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன!

இந்தியப் பொலிஸ் இலாகாவுக்குள்ளேயே வீரப்பனுக்கு உதவுபவர்கள் இருக்கின்றார்கள்!

அரசியல் செல்வாக்குள்ள புள்ளிகள் அவனைச் சுற்றியிருப்பதன் காரணமாக. இந்திய அரசு பெரும் சவாலைச் சமாளிக்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளது.

தனிக்காட்டு ராஜா போல் விளங்கும் சந்தன மரக்கடத்தல் காரன் வீரப்பனை வீழ்த்த முடியாதது ஏன் என்பது பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன.

காட்டுக்குள் தனக்கென்று ஒரு தனி ராஜாங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு தனிக்காட்டு ராஜாவாக விளங்கிவரும் வீரப்பன். சிறு வயதில் இருந்தே காடுகளில் வளர்ந்தவன்.

தமிழக எல்லையை ஒட்டிய கர்நாடக மாநிலம் கொள்ளேகால் தாலுகாவில் உள்ள கோபிநத்தம் என்ற கிராமம்தான் வீரப்பனின் சொந்த ஊர்.

இந்த ஊரை ஒட்டி ஒகேனக்கல் அருவியும். அடர்ந்த காடும். மலைப்பகுதிகளும் உள்ளன. இந்தப்பகுதியில் உள்ள சுமார் 200 சதுர கிலோ மீட்டர் பகுதியில் வீரப்பனின் தனி ராஜ்யம் நடக்கின்றது. சுருக்கமாகச் சொன்னால் இப்பகுதிக்கு அவன்தான் சிற்றரசன்!

1960 ஆம் ஆண்டு வீரப்பன் தனது 12 வது வயதில் காட்டில் உள்ள யானைகளை வேட்டையாடி தந்தங்களைத் திருடி விற்றுக்கொண்டிருந்த சேவியர் கவுண்டர் என்பவரிடம் வேலைக்குச் சேர்ந்தான். அப்போதே யானைகளை வேட்டையாடுவதில் திறமைசாலியாகவிருந்தான். 1970 ஆம் ஆண்டளவில்தான் வீரப்பனைப்பற்றி இந்திய வனவிலங்கு அதிகாரிகள் தெரிந்துகொண்டனர்.

1977 க்குப்பின்பு அவனே தனியாக தொழிலில் இறங்கிவிட்டான். தனக்கென ஆள் — படை எல்லாம் உருவாக்கிக்கொண்டான். வீரப்பனிடம் ஆயுத பயிற்சி பெற்ற 150 பேர் கொண்ட சிறு படையே இருப்பதாகக்கூறப்படுகிறது.

வீரப்பனின் தலைக்கு ரூபா 40 லட்சம்!

வீரப்பனின் தந்தை பெயர் கூசை முனிசாமி படையாச்சி கவுண்டர். அண்ணன் பெயர் கூரை மாதையன்., தம்பி அர்ச்சுனன் ஆகியோரும் உயிருடன்தான் உள்ளனர்.

வீரப்பன் தலைக்கு கர்நாடக அரசு ரூபா 40 லட்சம் அறிவித்திருந்தும் அரசியல் முக்கிய புள்ளிகளின் பக்க பலமும் — பொலிஸ் இலாகாவுக்குள்ளேயே வீரப்பனுக்குத் தகவல் கொடுத்துவரும் ஐந்தாம் படை அதிகாரிகளின் செயலும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவனைச் சுற்றி நம்பிக்கையான விசுவாசிகள் சூழ்ந்து இருப்பதால் இதுவரை அவனைப் பிடிக்க முடியவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கொலை — கொள்ளை என்று இதுவரை வீரப்பன் மீது 64 வழக்ககள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. 300 க்கும் அதிகமான யானைகளைக்கொன்று. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தந்தங்களைக் கடத்தியுள்ள வீரப்பன். ரூபா 30 கோடி மதிப்புள்ள சந்தன மரங்களையும் வெட்டியிருக்கின்றான்.

தமிழக — கர்நாடக எல்லைப்பிரதேசத்தில் உள்ள காட்டின் மத்தியில் குன்றி என்ற அடர்ந்த பகுதியில்தான் வீரப்பன் தனது உறைவிடத்தை அமைத்துக்கொண்டு இருப்பதாகக்கூறப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் வீரப்பனால் கொலை செய்யப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை 25 ஐத் தாண்டியிருந்தது. ஆனால் கடந்த மாதம் ஒருநாளில் மட்டும் 22 பேரை வீரப்பன் கொன்றுகுவித்துள்ளான்.

இப்போதுள்ள சூழ்நிலையில் வீரப்பனுக்குக் காட்டில் உள்ள மரங்களை வெட்டுதல் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு தளங்கள் கொண்ட அவனது மீசை... அவனுடைய புகழைப்போலவே மீசையும் வளர்ந்திருக்கின்றது. நெகு நெகுவென்று உரமேறிய ஒல்லியான உருவம். கழுத்தில் தாயத்துப்போல் புலி நகம் கொண்ட சங்கிலி... தனி இராணுவம்... இந்திய அரசுக்கு சவால் விடும் காட்டு ராஜா!

யானைகளைக்கொன்று தந்தம் எடுப்பது என்பதெல்லாம் வேலையில்லையாம். தன் தொழில் பாதிப்புக்குக் காரணமாகவுள்ள எல்லோரையும் ஒரு கை பார்த்துவிடுவது என்ற முடிவுடன் காட்டினுள் மிகத் துணிச்சலுடன் உலாவர ஆரம்பித்துவிட்டானாம்.

முன்பு, கர்நாடக பொலிஸ் அத்தியட்சர் அரிகிருஷ்ணா — சப். இன்ஸ்பெக்டர் அகமது உட்பட 7 பொலிஸாரை கொள்ளேகால் அருகில் மாதேஸ்வரன் மலைக் காட்டுக்குள் வீரப்பன் கும்பல் சுட்டுக்கொன்று பழி தீர்த்தது.

சம்பவம் நடந்த இடத்தில் என்னை யாராவது பிடிக்கவோ, கொல்லவோ முயன்றால் அவர்கள் சாவது நிச்சயம். பொலிஸாரைக்கொன்றதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் என்று வீரப்பன் பிழை மலிந்த தமிழில் எழுதி வைத்துவிட்டுச் சென்ற கடிதம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

காடுகளை ஒட்டியுள்ள மலைப்பகுதியில் கிரானைட், குவாரி தொழில் செய்யும் முதலாளிகள் சிலரை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று பணம் பறிக்கும் முயற்சியிலும் வீரப்பன் இறங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது.

பல இலட்சக்கணக்கான அப்பணத்தைவைத்து துப்பாக்கி — தோட்டா போன்ற ஆயுதங்களை வாங்கவதும், மொத்தமாக உணவுப்பொருட்களை வாங்கி சேகரிப்பதிலும் வீரப்பன் மும்மரமாக இருப்பதாக இந்தியப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குத் தேவையான உணவுப்பொருட்களை பிளாஸ்டிக் கோணிகளில் அடைத்து காடுகளில் ஆங்காங்கே பூமிக்கடியில் புதைத்து வைத்து இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

### தன் கோஷ்டியினர் மீதே சந்தேகம்!

இப்படி வீரப்பன் பல இடங்களில் பதுக்கி வைத்திருக்கும் சேமிப்பு கிடங்குகளின் இருப்பிடம் அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாம். அவனது கூட்டாளிகளுக்குக்கூடத் தெரியாதாம்.

ஒவ்வொரு காரியத்திலும் ஈடுபடுமுன்பு தனது கோஷ்டியினரின் ஆலோசனைகளை வீரப்பன் கேட்பது உண்டாம். ஆனால் இப்போது தன்னுடைய தம்பி அர்ச்சுனனைத் தவிர வேறு யாரிடமும் ஆலோசனை கேட்பது இல்லையாம். தன்னுடைய கோஷ்டியினராலேயே தனக்கு ஆபத்து வரலாம் என்று வீரப்பன் சந்தேகப்படுவதே இதற்குக் காரணம்.

சந்தனக்கடத்தல் மன்னன் வீரப்பன் தீவிர காளி பக்தன். எந்தவொரு காரியத்திலும் ஈடுபடுவதற்கு முன்னர் காளிதேவியை வணங்கிவிட்டுத்தான் காரியத்தில் ஈடுபடுவது வழக்கம். தன்னுடைய எதிரிகளைப் பழிவாங்கும் எண்ணம் நிறைவேறிவிட்டால், பழிவாங்கப்பட்டவரின் தலையை தனியாகத் துண்டித்து எடுத்து காளிமாதாவுக்கு ரத்த அபிஷேகம் செய்வது அவனது வாடிக்கை.

வீரப்பன் நடமாட்டம் உள்ள பகுதிகளில் கல் குவாரி அமைத்துள்ள தொழில் அதிபர்கள் சிலரும் வீரப்பனுக்கு நிதியுதவி அளித்துவருகிறார்கள். மைசூர் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி. க்களும் — எம்.எல்.ஏ. க்களும் வீரப்பனைப்பற்றி வாயைத் திறப்பதேயில்லை.

அவனிடம் இருந்து அவர்கள் பண உதவி பெறுவதே இதற்குக் காரணமாகும்!

சில உயர் பொலிஸ் அதிகாரிகளின் ரகசிய உறவால்... பொலிஸ் இலாகாவே பழிவாங்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


வெளியில் உலவும் கொடூரமான முகத்திற்கு மாறாக தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம் மிகவும் சிநேகிதமாகவும், எளிமையாக ஆதரவு காட்டும் மூத்தவனாகவும் வீரப்பன் நடந்துகொள்கின்றான். மிகவும் இரக்கமனப்பான்மைகொண்ட வீரப்பன் எதிரிகளுக்கு பாயும் புலி!

மரங்களின்கீழ் பாலிதீன் சீட் விரித்துப்படுக்கை — ஆனால் அவன்தான் தலைவன் என்பது வெளிப்படை. இளைய சகோதரன் அர்ஜுனன் நம்பகமான தளபதி. குழுவில் இருக்கும் நபர்கள் 60 வயதிலிருந்து 6 வயதுவரை உள்ளவர்கள். தினமும் இடம்மாறிக்கொண்டேயிருக்கும் 60 முகாம்களில் ஆண்களோடு பெண்களும் குழந்தைகளும் உண்டு.

வீரப்பனின் மனைவி முத்துலெஷ்மி அவனுடன் இருந்தாலும் வெளியில் தென்படுவதில்லை. மூன்று வயதில் ஒரு பெண்குழந்தை பக்கத்துக் கிராமம் ஒன்றில் இருக்கும் வீரப்பனின் மாமனார் வீட்டில் வளர்கின்றது.

கையில் துப்பாக்கி — தோளில் தொங்கும் பையில் வெடிமருந்துகளுடன் வீரப்பனும் அவனது குழுவினரும் தினமும் 70 வதிலிருந்து 100 கி.மீ. வரை நடக்கிறார்கள்.

இந்திய அரசுக்குப் பெரும் சவாலாகவிருக்கும் வீரப்பன் தனது படைபலத்தை நாளுக்குநாள் பெருக்கிவருவதாகவும், ஆயுதப்பயிற்சிகள் நடைபெறுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



தம்பியும் நம்பிக்கைக்குரிய உதவியாளனுமான அர்ஜுனனுடன் வீரப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிக்கு வரத் துடிக்கும் திருமதிகள்!



திருமதி சிறிமணி லலித் அத்துலத் முதலி





திருமதி சந்திரிகா குமாரணதுங்க

ஜனாதிபதி பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி ஆகியோரின் கொலைகளைப் பற்றிய சர்ச்சைகள் ஸ்ரீலங்காவில் தொடரும் அதே சமயம்... வன்முறைக்கு ஆளான தலைவர்களின் திருமதிகள் அரசியற் களத்தில் குதிப்பதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் செய்வதாக கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த மூன்று மாதங்களுக்கிடையில் இரு கட்சித் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்கள் கொல்லப்பட்டாலும் இலங்கையில் பெரிதாக எதுவும் நடைபெற்றுவிடவில்லை!

பதவியில் இருப்பவர்கள் தமது பதவியைக் காப்பாற்றிக்கொள்ள முயற்சிப்பதும் — பதவியில் இல்லாதவர்கள் தமக்கும் சந்தர்ப்பம் கிடைக்காதா என ஏங்குவதும் தற்பொழுது இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்களாகும்.

உலகம் மாறிவிட்டது. காலம் பதில் சொல்கிறது. தலைவர்களுக்கு விசுவாசமாக இருந்த காலம் மலையேறிவிட்டது.

அதிகாரப்போட்டியும் — பதவி வெறியும் எல்லோர் கண்களையும் மறைத்துவிட்டது.

அதிகார மேடையில் ஏறுவதற்கு எல்லோருமே துடிக்கின்றார்கள்.

வன்முறைக்காளானவர்களின் திருமதிகளும் விதிவிலக்கல்ல!

சுட்டுக்கொலை செய்யப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் லலித் அத்துலத் முதலியின் விதவை மனைவி சிறிமணி அரசியலில் பிரவேசித்திருக்கின்றார்.

ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி தலைமைப்பீடமும் ஆதரவாளர்களும் விடுத்த வேண்டுகோளை ஏற்றே தான் அரசியலில் பிரவேசித்திருப்பதாக கூறும் இவர் தனது கணவனின் பாதையே தனது பாதை என்கின்றார்.

அண்மையில் நடந்துமுடிந்த மாகாணசபை ஒன்றிற்கு இவர் தெரிவாகும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரியவருகின்றது.

மாகாண சபைத்தேர்தலில் மாகாணசபை அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்படும் ஒருவர் பதவியை இராஜினாமாச் செய்தால் அவரின் இடத்திற்கு எவரையும் நியமிக்கும் அதிகாரம் அவர் சார்ந்த கட்சிக்கு உண்டு. இந்த வகையில் மாகாணசபை ஒன்றின் அங்கத்தவராவதன்மூலம் இவரது அரசியற் பிரவேசம் ஆரம்பிக்கப்படும் என தெரியவருகிறது.

அடுத்து...

திருமதி சந்திரிகா குமாரணதுங்க!

இவரது அப்பாவும் அம்மாவும் இலங்கையின் பிரதமராகவிருந்தவர்கள். இலங்கையில் வன்முறை ஆரம்பத்திற்கு வழிசமைத்தவர்கள்.

இவரது தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமராகவிருந்தபோது 1959 ம் ஆண்டு அவரது Rosmead Place இல்லத்தில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். தனிச் சிங்களச் சட்டத்தை இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதன்மூலம் தமிழர்களுக்குப் பெருந்துரோகம் செய்த இவர் ஒரு இனவாதியாவார். இவரது மரணம் தொடர்ந்தும் மர்மமாகவேயிருந்துவருகின்றது.

இவரது மரணத்தைத் தொடர்ந்து... இவரது விதவை மனைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலில் பிரவேசித்தார். மக்கள் மத்தியில் தனது கண்ணீரைச் சிந்தியதன்மூலம் இலங்கையின் பிரதமரானார். தனது கணவனின் 'தனிச் சிங்கள'... பௌத்த கோஷத்தை முன்வைத்து நடவடிக்கைகள் மேற்கொண்டுவந்த இவர் இலங்கையில் துப்பாக்கிக் கலாச்சாரத்திற்கு நீர் பாய்ச்சியவர்.

இவர்களைத் தொடர்ந்து தற்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையைப் பிடிப்பதற்கு, தனது சகோதரனுக்கெதிராக, தாயாரின் துணையோடு முயற்சி செய்பவர்தான் சந்திரிகா குமாரணதுங்க.

இவரது கணவரும் அரசியல் வன்முறைக்கு இலக்கானவர்தான். அரசியலில் விஜய குமாரணதுங்காவின் குறிகியகால தீவிர வளர்ச்சி ஸ்ரீலங்கா அரசியல் வானில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்திவந்தன.

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளை நேரில் சந்தித்து... அன்றைய தளபதி கிட்டுவுடன் பிரச்சினைகளை அலசியவர் குமாரணதுங்கா.

இவரும் வன்முறைக்குப் பலியானார்... சுட்டுக்கொல்லப்பட்டார். இவரது மரணம் தொடர்ந்தும் மர்மமாகவேயிருந்துவருகின்றது. இலங்கையில் நடைபெறும் எந்தக்கொலைகளுக்குத் தான் நீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்கிபாரதி

ஸ்காபுரோ



எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா

விசாரணைகள் உண்டு!

தனது தந்தை... தாயார்... கணவன்... வழியில் அரசியலில் பிரவேசித்துள்ளார் சந்திரிகா குமாரணதுங்க!

அண்மையில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் வெற்றிவாகை சூடிய சந்திரிகா... மேல் மாகாணசபையின் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். 47 வயதான இவரது அரசியல் பிரவேசம் இலங்கை அரசியல்வானில் சலசலப்பை ஏற்படுத்தியே வருகின்றது. இவர் அரசியலில் நீண்டகாலமாக இருந்துவருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அண்மைக்காலங்களில்தான் இவரது தீவிர அரசியல் நாடகம் ஆரம்பமாகியுள்ளது. இவரது அரசியல் பிரவேசத்தினால் கூடுதலாகக் கலங்குபவர் வேறுயாருமல்ல! இவரது உடன் பிறப்பு அனுரா பண்டாரநாயக்காதான். அம்மாவுக்குப் பின்பு சுதந்திரக்கட்சியின் தலைமையை யார் பிடிப்பது என்பதிலேயே போட்டி! பதவிப்போட்டி!

சந்திரிகா அம்மாவின் அரசியல் நாடகத்தையும் பார்ப்போமே!

அடுத்து... இன்னுமொரு திருமதி அரசியல் பிரவேசத்திற்கு அங்கலாய்க்கின்றார். ஆனால் இவரது அரசியல் பிரவேசத்தை சொந்தக் கட்சியினரே விரும்பவில்லை என்பது புரிகின்றது. இருந்தும் மறைமுக பிரயத்தனங்கள் நடைபெறுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யார் இந்த அம்மையார்...?

ஹேமா பிரேமதாசா...!

எப்படிப்போகுது இலங்கை அரசியல்! கேட்பார் கிடையாது!

ஹேமா அம்மையார் கூறியிருப்பதையும் கவனியுங்கள் —

"எனது கணவர் வழியில் அவரது உயர்ந்த இலட்சியங்களைத் தொடர ஒத்துழைப்புத் தாருங்கள். எனது கணவர் மக்களுக்காக உழைத்தார் (?). மக்களுடன் கலக்கவே பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மீறி செயல்பட்டார். அவருக்கு நேர்ந்த கதி யாருக்கும் வரக்கூடாது... மக்களுக்காக அயராது உழைத்தவர் எனது கணவர். அவருக்கா இந்தக்கதி ஏற்பட்டது?... ஜனாதிபதி பிரேமதாசா எம்மைவிட்டு மறையவில்லை. எம்மை என்றும் பார்த்துக்கொண்டிருப்பார்... இத்தகைய அகால மரணங்கள் யாருக்குமே ஏற்படக்கூடாது (இலங்கையில் அகால— மரணங்கள் எத்தனை எத்தனையப்பா...!) எனது கணவரின் உயர்ந்த இலட்சியங்களைத் தொடர எனக்கு ஒத்துழைப்புத்தாருங்கள்!" —



ஹேமா பிரேமதாசா

என்று கூறியிருக்கின்றார் ஹேமா அம்மா.

பதவி ஆசை யாரைத்தான் விட்டுதையா?

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா — ஹேமா பிரேமதாசா — சிறிமணி லலித் அத்துலத் முதலி — சந்திரிகா குமாரணதுங்க... பட்டியல் நீழ்கின்றது.

இலங்கை அரசியலில் இவர்களது செயற்பாட்டைப் பார்ப்போமே! இவர்களை முன்நிறுத்தி நாடகம் போட முயற்சிக்கும் கூட்டத்தைப் பார்ப்போமே!

இவர்களா இலங்கையில் புரை— யோடிப்போயிருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்போகின்றார்கள்? அதையும் பார்ப்போமே...!



## அன்றொருநாள்




பிரேமாவும் லலித்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய ஸ்ரீலங்கா ஆட்சியின் பின்னணியில் J.R

ஸ்ரீலங்காவின் பிரபல பத்திரிகையின் பிரதம ஆசிரியராகக் கடமைபுரிந்தவரும் — சிறந்த எழுத்தாளரும் — 'தமிழருவி' பத்திரிகையுடன் நெருங்கிய தொடர்புடையவரும், தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை நெருக்கமாக அவதானித்துவருபவருமான பெயர் குறிப்பிடவிரும்பாத அப்பிரமுகர் இப்பட்டுரையை வடிக்கின்றார். தொடர்ந்து எழுதுவார். அவரது பெயரை எமது அடுத்த இதழில் நீங்கள் பார்க்கக்கூடியதாகவிருக்கலாம்.



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவும்

பாரிய இடி — மின்னல் — சூறாவளி — கடல் கொந்தளிப்பு ஆகியவற்றிற்குப் பின்னர் பூமி அமைதியாக இருப்பதுபோல கொழும்பு அரசியலிலும் இன்று அமைதி நிலவுகின்றது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா உயிருடன் இருந்தபோது அவரது செல்வாக்கைப் பெறுவதற்காக யாரையும் பகைத்துக்கொள்ள தயாராகவிருந்தவர்கள் எல்லாம் இன்று தடுமாறுவதை அவதானிக்கமுடிகின்றது!

ஜனநாயக வழியில் ஆட்சியைப் பிடித்து... அதிகார உச்சிக்குவந்த பிரேமதாசா சர்வாதிகாரியாக மாறினார். வெளியுலகுக்கு தான் ஒரு சமாதானப் பிரியராக இனங்காட்டிக்கொள்ள பிரயத்தனங்கள் செய்துவந்த பிரேமதாசா... தன்னைச் சுற்றி ஒரு இரும்புத்திரையையே போட்டுக்கொண்டார்.

சண்டித்தன ஆட்சி நடத்திவந்த முன்னாள் ஜனாதிபதி நாட்டில் நடைபெற்ற பல கொலைகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டு வந்தார்.

எந்த நடவடிக்கையையும் தனது எண்ணப்படியே நிறைவேற்றிவந்த பிரேமா, தனது மந்திரிசபையையோ... ஏன் பிரதமரையோ கூட ஆலோசனைகள் கேட்டதில்லை. அப்படி வரும் ஆலோசனைகளையும் அவர் ஏற்றுக்கொண்டதில்லை.

பிரேமாவின் தனிப்பட்ட படை — பட்டாளத்திற்கு அரசில்வாதிகள் எல்லோருமே அஞ்சினர். அவர்கள் அரசாங்கக் கட்சியினராகவிருந்தாலும் சரி — எதிர்க்கட்சியினராகவிருந்தாலும் சரி எல்லோருக்குமே அச்சம்தான்.

எதிர்த்தவர்களைக் காணவில்லை. ஜனாதிபதிக்கு எதிராகக் கதைத்தவர்களே பரிதவித்தனர். நேரில் கண்டும் கேட்டுமுள்ளேன்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். கூட சுதந்திரமாக இயங்கமுடியவில்லை என்று கூறினால் நம்புவீர்களா?

உண்மை அதுதான்...!

அச்சத்தின் காரணமாக பிரேமாவை விரும்பாதவர்களும், விரும்பியவர்கள்போல் நடந்துகொண்டார்கள் — நடித்துக்கொண்டார்கள்.

பிரேமதாசா கொலை செய்யப்பட்ட மறுகணமே அரசியல்வானில் பல வாய்கள் திறந்துள்ளன!

பிரதமராகவிருந்தபோது வாயே திறக்காத தற்போதைய புதிய ஜனாதிபதி திடமாக — வேகமாக எடுத்துவரும் சில நடவடிக்கைகளுக்கு நிச்சயமாக யாரோ பின்னால் நிற்கின்றார்கள் என்பதை அவதானிக்கமுடிகின்றது.

தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவின் தன்மைகளைப் புரிந்துகொண்டவாகளுக்கு இந்த உண்மைகள் தெரியவரும்.

பிரேமதாசாவின் தனிப்பட்ட படையணிகள் கலைக்கப்படுகின்றன!

அவர் ஆதரவு இயக்குனர்கள் சபைகள் பல இருந்த இடம் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஜே.ஆர். பதவிக்கு வரமாட்டாராம்... யு.என்.பி. ஐ புனிதமாக்கும் காரியங்களை திரைமறைவில் செய்துவருகின்றாராம். அதன் அர்த்தம் என்ன? காமினி திஸநாயக்கா யு.என்.பி. க்குள் இழுக்கப்படுவாரா? ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் திரைமறைவு நடவடிக்கைகள் இதுதானா?**



ஆக்கப்படுகின்றன!

அவரது நெருங்கிய உறவினர்களின் உயர் பதவிகள் பறிக்கப்படுகின்றன!

பிரேமதாசா அதிகாரத்தில் இருந்த சமயம் 'ஆமாம் சாமி' போட்டவர்கள் எல்லாம், இன்று பேசாமல் இருந்தாலும் பரவாயில்லை... அவருக்கு எதிராகவும் குரல்கொடுப்பதுதான் விந்தையாகவுள்ளது.

நேற்று அவர்கள் பிரேமாவை ஆதரித்தார்கள்!

ஏன்?

பதவிக்காக...!

பட்டத்திற்காக...!

நினைத்ததை முடிப்பதற்காக...!

இன்று... ஏன் அவர்கள் பிரேமாவை — அவரது தத்துவங்களை (?) ஆதரிக்கவேண்டும்?

அதனால் என்ன பயன்?

யாதுமே இல்லை.

இன்று புதிய கட்சித் தலைவரை ஆதிரிக்கின்றார்கள். அவரது கொள்கைகளை — திட்டங்களை போற்றுகின்றார்கள்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா பதவியில் இருந்த போது அவரை ஆதரித்தவர்கள்... அவர் பதவி இல்லாதபோது அவரை அணுகவில்லை. பிரேமதாசாவை ஆதரித்தார்கள்.

இன்று பிரேமதாசா இல்லை. அதனால் டி.பி. விஜயதுங்காவை ஆதரிக்கின்றார்கள்.

நிலமைகளை மிகவும் அவதானமாக நரிக்குணத்துடன் அவதானித்துவருகின்றார் ஜே.ஆர்.

ஜே.ஆர். — விஜயதுங்கா உறவு மிகவும் நெருக்கமாகவுள்ளது. முக்கிய விடயங்களில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனைகளைப் பெற்றே நடவடிக்கைகள் மேற்கொள்கின்றார் புதிய ஜனாதிபதி.

சந்தர்ப்பததை நல்ல முறையில் பயன்படுத்துகின்றார் ஜே.ஆர்.

"யு.என்பி. புனிதப்படுத்தப்படவேண்டும்" — என்று சில நெருக்கமானவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். கூறியுள்ளார்.

முதற்கட்டமாக தற்போதைய ஆட்சியில் உள்ள "பிரேமா துதிபாடிகள்" ஒதுக்கப்படுகின்றார்கள்.

மெதுவாக உறுதியாக இந்நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஜே.ஆரே பின்னணியில் உள்ளார்.

அரசியலுக்கு மீண்டும் வரும் உத்தேசம் இல்லை என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதியின் அறிக்கையொன்றை அவதானியுங்கள் —

"நான் மீண்டும் அரசியல் வாழ்வுக்கு வருவேனா எனக்கேட்டும் அவ்வாறு வருமாறு அழைப்பு விடுத்தும் தொலைபேசி அழைப்புக்கள் மூலமாகவும், கடிதமூலமாகவும் நேரிலும் பலர் என்னிடம் தொடர்ந்தும் விசாரித்து வருகின்றார்கள்.

அவ்வாறு செய்யும் உத்தேசம் எனக்கில்லை என நான் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கின்றேன்.

படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதியைத் தொடர்ந்து பதவிக்கு வந்துள்ள புதிய ஜனாதிபதியும் அவருடைய பிரதமரும் ஜனநாயக சுதந்திங்களைப் பாதுகாப்பதிலும் தாராள பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தையும் நன்கு அறிந்திருப்பார்கள் என நான் உணர்கின்றேன்... எனது பணி என்று ஒன்று இருக்குமானால்... அது யு.என்.பி. ஐ புனிதமாக்கும் பணியே..." — என்கிறார் ஜே.ஆர்....!

அது என்ன?

யு.என்.பி. ஐ புனிதமாக்குவது?

சில வாரங்கள் பொறுத்திருந்து பார்ப்போமே!


நோய்வாய்ப்பட்டுள்ள ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசியலுக்க வரும் சந்தர்ப்பம் இல்லை.

ஆனால் அவசரமும் அவசியமுமான சில நடவடிக்கைகளை அவர் எடுப்பார் என நம்பலாம்.

பிரேமதாசாவின் பின்பும் ஜே.ஆர். உயிர் வாழ்வது கறை படிந்த தமது கட்சியைத் துடைத்து சுத்தமாக்குவதற்கே என்கிறார் யு.என்.பி. அபிமானி ஒருவர்.

**திரைமறைவில் நடைபெறும் சில விடயங்களின் தாக்கங்களை சில வாரங்களில் அவதானிக்கலாம்!**

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து!



**செல்வன் ஜெசிந்தன்**

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த ஜெயந்திரன் — தவஜா தம்பதிகளின் தவப்புதல்வன் ஜெசிந்தன் தனது முதலாவது பிறந்தநாளை கடந்த 17.4.93 அன்று Mississauga இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் கடைசிச் சந்திப்பா?

## இந்தியப் பத்திரிகைகள் எழுப்பும் கேள்வி!



கடந்த 27 ம் திகதி இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் சென்னைக்கு விஜயம் செய்தபொழுது முதலமைச்சர் ஜெயலலிதாவினால் மீனாம்பாக்கம் விமானநிலையத்தில் வரவேற்கப்பட்டார்.

இந்தியாவே ஜெயலலிதாவுக்கெதிராகக் கொந்தளிப்பதுபோல் இருக்கும் இச் சூழ்நிலையில் ஜெயலலிதா, பிரதமரை வரவேற்பது இததான் இறுதித்தடவையா? என இந்தியப் பத்திரிகைகள் கிண்டல் செய்துள்ளன.

ஜெயலலிதாவைப் பழிவாங்குவதற்கு சுப்பிரமணிய சுவாமி — கலைஞர் கருணாநிதி — தமிழக காங்கிரஸார் — சவான் — அ.தி.மு.க. எதிரணியினர் — தமிழகத்தின் பெரும்பான்மையான பத்திரிகைகள் என எல்லோருமே காத்துக்கிடக்கின்றார்கள். மத்திய அரசு ஜெயலலிதாவின் ஆட்சியில் கை வைக்கும் காலம் நெருங்கிவிட்டதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

## குப்பி விளக்கில் இயங்கும் யாழ். அரச செயலகம்!

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் செயலகம் குப்பி விளக்கின் மூலமே செயற்பட்டுவருகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள இவ்வலுவலகம் உட்பட பல்வேறு அலுவலகங்களிலும் குப்பி விளக்கின் மத்தியிலேயே கடமைகள் நடைபெற்று வருகின்றன.

மழை மற்றும் மந்தார மப்பு நேரங்களில் ஒவ்வொரு உத்தியோகத்தர்களின் மேசைகளிலும் ஒவ்வொரு குப்பி விளக்குகள் தெரிகின்றன.

இச் செயலகத்தில் மின் பிறப்பாக்கி பழுதடைந்து நீண்ட நாட்களாகிவிட்ட போதிலும் அதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனாலேயே இந்த அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்வாசி ஒருவரின் பரிதாப மரணம்!

யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த 29 ம் திகதி கொழும்பு புறப்பட்ட நடுத்தரவயது குடும்பஸ்தர் ஒருவர் ஓமந்தையில் வைத்து பரிதாபமாக மரணமானதாகக்கூறப்படுகிறது.

வடக்கிலிருந்து புறப்பட்டு கிளாலியைக்கடந்து வந்த இவர் மாலை நேரமாகிவிட்டதால் ஓமந்தையில் தெரிந்தவர் வீடு ஒன்றில் அன்றைய இரவு தங்கியுள்ளார். நள்ளிரவு நேரம் அவசரதேவையாக வீட்டுக்கு வெளியே வந்த இவர் பாதுகாப்பற்ற கிணறு ஒன்றினுள் தவறுதலாக விழுந்துவிட்டாராம்.

அயலவர்கள் அவரை மீட்பதற்காக கயிறை கிணற்றினுள் இறக்கியுள்ளனர். கயிற்றைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறி வந்த இவர் நீர் இறைக்கும் குழாயைப்பிடித்து மேலே ஏற முற்பட்டபோது கை வழுக்கியதால் மீண்டும் கிணற்றினுள் விழுந்தாராம். கல்லில் அவரது தலை அடிபட்டதும் மூர்ச்சித்து மீண்டும் நீரில் மூழ்கி மரணமானதாகத் தெரியவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண. சிங்கராயர் காலமானார்

வண. சிங்கராயர் யாழ்ப்பாணத்தில் காலமானார். மே மாதம் 10 ம் திகதி காலமான இவரின் இறுதிச் சடங்கு மே 12 ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. மாரடைப்பு நோயினால் காலமான இவருக்கு வயது 50 ஆகும்.

விடுதலைப் புலிகளுக்கு உதவியதாக இவருக்கு எதிராக பயங்கரவாதச் சட்டத்தின் கீழ், மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்தது.

இக்காலப் பகுதி 82 — 87 ஆகும். இவ்வழக்கில் சிங்கராயர் விடுதலையானார்.

மட்டக்களப்பு சிறைச்சாலை 1984 ல் விடுதலைப் புலிகளால் உடைக்கப்பட்டு, ஏனைய சந்தேக நபர்கள் சிறையிலிருந்து தப்பியபோது, சிங்கராயர் வெளியேற மறுத்து, தொடர்ந்தும் சிறையிலேயே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வண. சிங்கராயர் சிறந்த கல்வியாளன் ஆவார். இவர் ஒரு பி.ஏ., எம்.ஏ. பட்டதாரியாவார். கல்வி, உளவியல் போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்தார்.

# யாழ் குடாநாட்டில் போர் விமானங்கள் நோட்டம்!

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாக போர் விமானங்கள் வானத்தில் அடிக்கடி பறந்தவண்ணமிருக்கின்றன. இதனால் மற்றொரு இராணுவ நடவடிக்கைக்கு படையினர் தயாராகின்றனரா என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

கடந்த சில தினங்களாக புக்காரா — சுப்பர் சோனிக் விமானங்கள் பொம்பர்கள் ஆகாயத்தில் உயரப்பறந்து யாழ். குடாநாட்டை அடிக்கடி நோட்டமிட்டதை அவதானிக்கக்கூடியதாகவிருந்ததாக யாழ்ப்பாணச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாதகல், அராலி, காரைநகர், தெல்லிப்பழை பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் இரவில் 'ஷெல்' தாக்குதலை நீண்டகால இடைவெளியின் பின்னர் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இரவு நேரங்களில் பரா வெளிச்சம் பாய்ச்சி இராணுவத்தினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலை மேற்கொள்கின்றனர். இதனால் முகாம்களுக்கு அண்மையில் வாழும் மக்கள் தூர இடங்களிலுள்ள ஆலயங்களிலும் பொது இடங்களிலும் இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர். இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இராணுவ துப்பாக்கிச் சூட்டுக்கு சிறுமி காயம்!

வீட்டு முற்றத்தில் கதைத்துக்கொண்டிருந்த சிறுமி, கட்டுவன் முகாமிலிருந்து இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கவிதா (14 வயது) என்ற சிறுமியே இவ்வாறு காயமடைந்தவராவார். கடந்த 28ம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் இச்சிறுமி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வடக்கிலும் கிழக்கிலும் 56 டாக்டர்கள் நியமனம்!

வடக்கு — கிழக்கு வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்கு இருந்துவந்த தட்டுப்பாட்டின் ஒரு பகுதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் பயின்று 1992 நவம்பரில் நடைபெற்ற இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த 56 டாக்டர்களையும் நியமனம் செய்ததினால் தீர்க்கப்பட்டுள்ளது.

இந்த டாக்டர்களில் 26 பேர் யாழ். வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு 10 டாக்டர்களும், திருகோணமலை மாவட்டத்திற்கு 8 டாக்டர்களும் வவுனியா மாவட்டத்திற்கு 3 டாக்டர்களும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஒருவருமாக 56 பேரும் நியமனம் பெற்றுள்ளனர்.

வடக்கு — கிழக்கு மாகாணங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு டாக்டர்கள் நியமனம் செய்யப்படுவதோடு வைத்தியசாலைகளிலும் பல அபிவிருத்திகள் வெளிநாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. யாழ். போதனா வைத்தியசாலையில் நவீன எக்ஸ்ரே கருவியை அமைப்பதற்கான நிதியை ஜேர்மன் அரசாங்கம் வழங்க முன்வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகில் ஒத்திகை

ஸ்ரீசக்திபாரதி



## லண்டனில் தமிழ் தம்பதி தகராறு!

## மனைவியைச் சுட்டுக்கொன்று கணவனும் தற்கொலை!

இது ஒரு கற்பனைக் கதையல்ல. லண்டனில் கடந்தமாதம் நடைபெற்ற ஒரு உண்மைச் சம்பவத்தை கருவாகக்கொண்டு ஆக்கப்பட்டது. பெயர்கள் — சம்பவங்கள் மாற்றப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம்!

1976 ம் ஆண்டில் ஒருநாள்...

கொழும்பில் இரண்டுவாரங்களை கழித்துவிட்டு கொக்குவில் புகையிரத நிலையத்தில் வந்திறங்குகின்றான் இந்திரன்.

புகையிரத நிலையம் அமைதியில் ஆழ்ந்திருக்கின்றது!

அதிகாலை நேரம்... நிலம் தெளிந்துவருகின்றது. மெதுவாக வீட்டுக்கு நடக்கத் தொடங்குகின்றான் இந்திரன். கலட்டி அம்மன்கோவிலடி என்ன பெரிய தூரமா?

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியைத் தாண்டும்போது... எதிரே செல்லத்துரையப்பா வந்துகொண்டிருக்கின்றார்.

இந்த வயதிலும் செல்லத்துரையப்பா எப்படி நடந்துவருகின்றார்.

85 வயதுக்குமேல் இருக்கும்! இந்தவயதுவரைக்கும் நாம் இருப்போமா என்று இந்திரன் எண்ணிக் கொள்கின்றான்.

"என்ன தம்பி... மெயில் றெயினிலை வந்தனிபோல... எப்பிடிச் சனமே... களைச்சுப்போயிருப்பாய்... போ... போ..." — நின்று கதைத்த செல்லத்துரையப்பா தொடர்ந்து தேய்த்துத் தேய்த்து நடக்கின்றார்.

ஏனோ செல்லத்துரையப்பாவை மீண்டும் திரும்பிப்பார்த்த இந்திரன் தனது நடையை தொடர்கின்றான்.

இரண்டுவாரங்கள்தான் கொழும்பில் இருந்த இந்திரனுக்கு தனது மண்ணில் நடக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி! நாம் பிறந்த பூமி எதற்கு ஈடாகும்?

கண்ணுத்துரை மாமா மாடு ஒன்றை இழுத்துக்கொண்டு வருகின்றார். நரியன்குண்டுக் குளத்திற்குள் மாடு விழும்போலை கிடக்கு! அவ்வளவு இழுப்பு இழுக்கின்றது...

"என்ன தம்பி... மாடு கத்துது அதுதான் இழுத்துக்கொண்டு போறன்..." — என்று கூறியபடியே மாட்டோடு இழுபட்டுக்கொண்டு கண்ணுத்துரை மாமா போகின்றார்.

தற்பொழுது வீடு தெரிகின்றது... இந்திரனின் அப்பா முத்தம் கூட்டிக்கொண்டு நிற்கின்றார். வீட்டு வாசலை இந்திரன் நெருங்கியபோது... நிமிர்ந்து பார்த்த இந்திரனின் அப்பா...

"றெயில் வந்திட்டுதுபோல..."

"ஓமோம்..."

"சனமோ... இருக்க இடம் கிடைச்சுதோ...?"

"அன்ராசபுரத்திற்கு இஞ்சாலைதான் கிடைச்சுது..."

"எத்தினை றெயின் ஓடுது... அப்பவும் சனம்தான்..." — என்று கூறியபடி இந்திரனை நிமிர்ந்து பார்த்த அப்பா. "போன விஷயம் எப்படி...?" என்கிறார்.

"ஸ்பொன்சர் லெற்றரிலை ஏதோ பிழையாம். கடிதம் தந்தவைக்கு அங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் காணாதாம்... அதாலை லண்டன் விசா கிடைக்கேல்லை..." — என்கிறான் இந்திரன்.

"என்ன... வெளிநாடு...? இஞ்சை என்ன சும்மாவேயிருக்கிறாய்? படிப்பிக்கிறாய்... வருமானம் வருகிது... சந்தோஷமாய் இரன்... எங்களைவிட்டிட்டு ஓடப்போறன் எண்டு நிக்கிறியே...!" — இந்திரனின் அப்பா தனது உள்ளக்கிடக்கையை எடுத்துக்காட்டுகின்றார்.

இந்திரன் மௌனமானான்!

இந்திரன் எப்படியும் தனது படிப்பைத் தொடர்வதற்காக இங்கிலாந்து போகவேண்டும் என்று பிடிவாதமாகவுள்ளான். வீட்டாருக்கு விருப்பமில்லை. இருந்தும் இந்திரனின் தாயும் தந்தையும் 'இங்கிலாந்து போகவேண்டாம்' என்று பிடிவாதம் காட்டவில்லை. அவர்கள் குடும்பம் அப்படி... பக்குவமாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்திரனின் போக்கில் எந்தவிதமான மாறுதல்களும் ஏற்படவில்லை. தனது இங்கிலாந்து விடயமாக அடிக்கடி கொழும்பு சென்றுவரும் இந்திரன்... தனது தாய், தந்தையரில் பாசம் நிறைந்தவன்.

இந்திரன் மௌனமானதை அவதானித்த இந்திரனின் அப்பா...

"சரி... சரி... என்ன யோசிச்சுக்கொண்டு நிக்கிறாய்... உள்ள போ... அம்மாட்டை நல்ல முட்டைக்கோப்பி வாங்கிக் குடி... கொம்மா இன்னும் எழும்பேல்லை... ரண்டு நாளா இருமிக்கொண்டும் இருக்கிறா..." — என்று கதைத்துக்கொண்டேயிருந்த அப்பாவைவிட்டு விலகி வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்கின்றான் இந்திரன்.

வீடு அமைதியில் உள்ளது. அப்பா வழமைபோல் நேரத்தோடு எழும்பிவிடுவார். அம்மாவும் தம்பி தங்கைமாரும் இன்னும் எழும்பவில்லை.

"அம்மா... அம்மா..." — இந்திரனின் குரல்.

இந்திரனின் குரல்கேட்டு சேலைத் தலைப்பை முடிந்தபடி அறைக்குள் இருந்து ஓடிவாறா அம்மா...

"என்னப்பு வந்திட்டியே...? வாடிப் போயிருக்கிறாய்...! போ... போ... குளிச்சிட்டு வா... பிள்ளைக்கு நல்ல முட்டைக்கோப்பி முதல்ல தாறன்..." — தாய் தனது பாசத்தைக் கொட்டினாள்.

"என்ன உங்களுக்கு இருமலாம்... அப்பா சொன்னார்..."

"அது சும்மா... இப்ப சுபம்... அப்பா கொஞ்சம் எண்டா பெரிசாக்கிப்போடுவார்..." — அம்மா வெளியே பார்த்தபடியே கூறுகின்றார்.

அண்ணனின் குரல்கேட்டு தங்கையும் — தம்பியும் நித்திரையால் துடித்து எழுந்து ஹோலுக்கு வந்துவிட்டார்கள்.

"என்ன வேண்டிக்கொண்டு வந்தனீங்கள்... கொழும்பிலையிருந்து..." — இது தங்கை.

"எனக்கென்ன கொண்டுவந்தனீங்கள்..." — இது தம்பி.

### மூன்று மாதங்களுக்குப் பின்...

இந்திரனுக்கு இங்கிலாந்து போவதற்கு விசா கிடைத்தது. பறந்து சென்றான். புதிய உலகில் தனது வாழ்வைத் தொடங்கினான். இங்கிலாந்து வந்ததன் பின்புதான் "அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை" என்பதைப் புரிந்துகொண்டான். என்ன செய்வது...?


LEARN & EARN

Driving School

1880 O'CONNOR DRIVE (ON VICTORIA PK.), SUITE 405, NORTH YORK



ராஜ் மைல்வாகனம்

இது விளம்பரமல்ல. உண்மை...! Learn & Earn ஆசிரியர்களின் திறமையான பயிற்சியும் அவர்களின் ஒத்துழைப்பும் என்னை வீதிப்பரீட்சையில் (Road Test) ஒரே முறையில் சித்தியடைய வைத்தது. பயிற்சி முறைகள் போற்றத்தக்கன...!




ராஜா கந்தையா

நான் இன்று சிறந்த வாகன ஓட்டியாகத் திகழக்காரணம் Learn & Earn ஆசிரியர்களின் பொறுமையும், திறமையும் மிக்க பயிற்சியுமாகும். நண்பர்களே வாருங்கள் பயனடையுங்கள்...!




குகன் செல்வா

ஒரே தடவையிலேயே எனது வாகன லைசன்ஸைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. காரணம் நான் பயிற்சி பெற்ற முறைமைகளே...! நீங்களும் ஒரே முறையில் உங்கள் வாகன லைசன்ஸைப் பெற்றுக்கொள்ளவேண்டுமா? Learn & Earn ஆசிரியர்களிடம் உங்கள் பயிற்சியை ஆரம்பியுங்கள். வெற்றி நிச்சயம்!

(416) 288 - 1499




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டான்... ஏதோ காலத்தை ஓட்டினான்...! லண்டனில் திருமணம் செய்து கொண்டான். இங்கிலாந்து சென்று பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு— முறை இலங்கை சென்று வந்தான். தந்தையைப் பறிகொடுத்தான். காலஓட்டத்தால் பல மாறுதல்கள்.

### பதினேழு ஆண்டுகளுக்குப் பின்...

(பத்திரிகைச் செய்தியொன்றை அப்படியே தருகின்றேன்)

மனைவியை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துவிட்டு தன்னையும் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார் லண்டனில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த தமிழர் ஒருவர்!

லண்டனில் உள்ள சவுத்ஹோல் என்ற இடத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது. லண்டன் பத்திரிகைகள் இதுபற்றி செய்திகள் வெளியிட்டுள்ளன. விபரம் வருமாறு —

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்திரன் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர் லண்டனுக்குப் படிக்கவந்தார். சில காலத்தின் பின்னர் சங்கீதா என்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் பெண்ணும் லண்டன் வந்தார். இந்திரனுக்கும் சங்கீதாவுக்குமிடையே காதல் மலர்ந்தது. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருவரது திருமணமும் நடந்தது.

ஆரம்பகாலத்தில் மருத்துவ தாதியாகப் பணிபுரிந்த சங்கீதா பின்னர் 'கமர் சிமித்' என்ற இடத்தில் உள்ள 'மிட்லண்ட்' வங்கியில் பணிபுரிந்துவந்தார். இவரது கணவன் இந்திரன் ஏர்கண்டிஷன் பொறியியலாளராக பணியாற்றினார்.

இதனிடையே இருவருக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகள் காரணமாக அதே வீதியில் தன் தாயாரும் தம்பி காந்தன் என்பவரும் வாழும் இல்லத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக சங்கீதா தனது கணவனை விட்டுப்பிரிந்து வாழ்ந்துவந்தார்.

இந்தக்காலத்தில் தன் கணவர் இந்திரனிடமிருந்து விவாகரத்துக்கோரி வழக்கும் தாக்கல் செய்திருந்தார் சங்கீதா.

இந்திரன் மனமுடைந்திருந்தார். சம்பவம் நடந்த மாலை தனது வீட்டிலிருந்து மூன்றாவது வீட்டுக்குப்போனார். இங்குதான் அவரது மனைவியும் மகனும் வாழ்கிறார்கள். சங்கீதாவின் தாயார் அங்கு இருந்தார். அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, மனைவி சங்கீதா காரில் வந்திறங்கினார். உள்ளே சென்றபோது கணவனைக்கண்டார்.

ஒரு விஷயம் கதைக்கவேண்டும் என்றும் வீட்டிற்கு வரும்படியும் சங்கீதாவை அழைத்திருக்கின்றார் இந்திரன்.

'இங்கேயே கதைப்போம்..' — என்று கூறியிருக்கின்றார் சங்கீதா!

'இல்லை தனியாகக் கதைக்க வேண்டும்' — என்று கெஞ்சியிருக்கின்றார் இந்திரன்.

சங்கீதா முதலில் மறுத்துவிட்டார். கடைசியாக கொஞ்சநேரம் கதைக்கவிரும்புவதாக மேலும் விடாப்பிடியாகவிருந்திருக்கின்றார் இந்திரன்.

சங்கீதாவின் தாயார் மனமிளகி, மகளை ஒருமுறை அவரது வீட்டிற்குப்போய் கதைத்துவிட்டு வருமாறு கூறியிருக்கின்றார்.

இதன்பின்னரே சங்கீதா தன் கணவனுக்குப் பின்னால் சென்றிருக்கிறார். சீதா அறையினுள் நுழைந்ததும் கதவு சாத்தப்பட்டது. மகன் வெளியே நின்றார்.

ஓரிரு நிமிடத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டிருக்கிறது. மகன் உருத்திரன் துடித்துக்கொண்டே பாட்டியின் வீட்டிற்கு ஓடினார். விஷயத்தைச் சொன்னதும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸ் சில நிமிடங்களில் சம்பவம் நடந்த வீட்டை முற்றுகையிட்டது. 90 நிமிடங்கள்வரை ஆயுதம் தாங்கிய பொலிஸ் உள்ளே நுழையவில்லை.

சரணடையுமாறு உள்ளே இருந்த இந்திரனுக்கு பொலிஸார் கோரிக்கைவிட்டனர். நீண்ட நேரம் எந்தவிதமான அசுமாத்தங்களும் இருக்கவில்லை!

இதன் பின்னரே பொலிஸார் கண்ணாடியை உடைத்துக்கொண்டு உள்ளே சென்றனர்.

கணவனும் மனைவியும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

சங்கீதா முன்புற வாசற்கதவருகில் உள்ளே இறந்துகிடந்தார். முதுகுப்புறத்தில் இரண்டு இடத்தில் குண்டுகள் பாய்ந்து கிடந்தன. தப்பியோட முயன்றபோது சங்கீதாவுக்கு முதுகில் துப்பாக்கிச் சூடுகள் விழுந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்திரனின் நெஞ்சில் துப்பாக்கிக்குண்டுகள் பாய்ந்திருந்தன. துப்பாக்கியும் அருகில் இருந்தது. உடல்களும் வெளியேற்றப்பட்டு, வீட்டிற்குப் பொலிஸார் சீல் வைத்தனர். இவர்கள் இருவரினதும் மரணவிசாரணை லண்டன் ஈலிங் என்ற இடத்திலுள்ள நீதிமன்றத்திலும், சம்பவம் நடைபெற்ற இடத்திலும் நடைபெற்றுள்ளது!

.............................................???


## பன்னிரெண்டாவது பிறந்தநாள்

## வாழ்த்து!



**சுகந்த்**
**Suganth**

திரு. திருமதி. ந.சந்திரமோகன் — அன்பரசி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுகந்த் தனது பன்னிரெண்டாவது பிறந்த தினத்தை 30. 04 93 அன்று ஸ்காபுரோவிலுள்ள தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக்கொண்டாடினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா பாடல் மூலம் சாதனை புரிந்த

# கவிஞர்!



பொது உடமைக் கருத்துக்களை சினிமாப் பாடலாக்கி தமிழ்ச்சினிமா துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

அதே காலத்தில் "முல்லை மலர் மேலே மொய்க்கும் வண்டு போலே..." — "வசந்த முல்லை போலேவந்து அசைந்து ஆடும் வெண்புறாவே..." போன்ற ஜனரஞ்சகமான பாடல்கள் மூலம் சினிமாத்துறையில் கொடிகட்டிப் பறந்தவர் மருதகாசி. இந்த இரு பெருந்திரைப்படக் கவிஞர்களுக்கு மத்தியில் காதல் பாடல்கள்மூலம் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடிக்கத் தொடங்கினார் கவிஞர் கண்ணதாசன்.

கதை வசனகர்த்தாவாக பாடலாசிரியராக, தயாரிப்பாளராக, நடிகராகவென சினிமாத்துறையில் அகலக்கால் வைத்து வேர் ஊன்ற முயன்ற கவிஞர் கண்ணதாசன், பாடலாசிரியர் என்ற வகையில்தான் தனது நிலையை உறுதிப்படுத்திக்கொண்டார்.

படத்தயாரிப்புத் துறையில் பல படங்கள் மூலம் பெரும் நட்டத்தைச் சந்தித்த கவிஞர் கண்ணதாசன் பின்னர் தயாரிப்புத் துறையில் கைவைக்கமுயலவில்லை.

"கவலையில்லாத மனிதன்" என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரித்து பெரும் நட்டமடைந்து கவலை உள்ள மனிதனாகத் தான் மாறியதாக ஒருமுறை கண்ணதாசன் எழுதியிருந்தார்.

சினிமாத்துறைக்கு வெளியே அரசியலில் அவர் பல கட்சிகளிலும் அங்கம் வகித்திருக்கின்றார். எல்லா அரசி யல் தலைவர்களும் அவரது போற்றுதலு க்கும் ஆளாகியிருக்கின்றனர். தூற்றுதலு க்கும் ஆளாகியிருக்கின்றனர். அறிஞர் அண்ணா, தலைவர் காமராஜர், இந்திரா காந்தி, கருணாநிதி, எம்.ஜி.ஆர்: என எல்லா அரசியல் தலைவர்களையும் மதித்துத் துதிபாடியும் இருக்கின்றார். வெறுத்து வசைபாடியும் இருக்கின்றார்.

கவிஞர் கண்ணதாசனின் மறைவுக்கு இரங்கல் கவிதை பாடும்போது கலைஞர் கருணாநிதி கவிஞர் கண்ணதாசனின் அரசியல் வாழ்வுபற்றி மிகவும் அழகாகக் கூறியிருக்கின்றார்.

<u>கைநீட்டி அழைக்கின்ற</u>
<u>பக்கமெல்லாம் தாவுகின்ற</u>
<u>குழந்தை நீ — காலன் உன்னை</u>
<u>கைநீட்டி அழைத்தவுடன் சென்றுவிட்டாய்</u>

இப்படி அரசியலில் அவர் அலைந்து திரிந்ததாக சுட்டிக்காட்டியிருக்கிறார் கலைஞர்.

தனது கொள்கைகளின் மொத்த வடிவமாக ஒரு அரசியல் கட்சியும் இல்லை. அதனால் ஒவ்வொரு கொள்கைக்காக ஒவ்வொரு கட்சியாக அலையவேண்டி ஏற்பட்டது என்று ஒரு முறை கூறினார். அரசியலில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பிடிக்க முடியாமல்போனலும் சினிமாத் துறைமூலம் ஒரு நல்ல கவிஞர் என்ற பெயரைப்பெற்று தமிழக அரசின் ஆஸ்தான கவிஞர் என்ற சிறப்புப் பதவியைப்பெற்று இருக்கும்போதே சிறப்போடு வாழ்ந்தவர் கண்ணதாசன்.

சினிமாப் பாடல்டகளைப் பொறுத்த வரையில் கவிஞர் கண்ணதாசன் பெரும் சாதனையாளர்தான். வேறு வேறு பாடலாசிரியர்களால் எழுதப்பட்ட மிக நல்ல பாடல்க

தொடர்ச்சி 27 ம் பக்கம்

மூன்றாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

வையத்துள் அறிமுகம்
26 . 03 . 1964



தெய்வத்துள் சங்கமம்
07 . 06 . 1990

செல்வி க. நர்மதா அவர்கள்
(நடன ஆசிரியை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)

எம்மை விட்டுப்பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும் தங்கள் நினைவுகள் எம்மைவிட்டு என்றும் நீங்காது.
எங்கள் இதயதீபமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

N.Balachandran
Toronto
Canada

உங்கள் பிரிவால் துயருறும் —
பெற்றோர், சகோதரர்கள், அம்மம்மா, சித்தப்பா, சின்னம்மா, மாமன்மார், மாமிமார், உற்றார், உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுவீச்சு விமானங்கள்

## அவுஸ்திரேலியாவின் புதிய ஆர்வம்!

அவுஸ்திரேலியா கடந்த மாதம் பதினெட்டு குண்டு வீச்சு விமானங்களை வாங்க பெருமளவு பணத்தைச் செலவிட்டுள்ளது. ஆனால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரிகள் யார் என்பதே இப்போதைய முக்கிய கேள்வியாகும். அவுஸ்திரேலியா பாதுகாப்பு அமைச்சு எப்—111 ரக குண்டுவீச்சு விமானங்களை மிக மலிவு விலையில் பத்துகோடி டாலர்களுக்கு கொள்வனவு செய்ததாக அண்மையில் அறிவித்துள்ளது.

சுப்பர் சொனிக் விமானங்களான இவைகள் 1960 ம் ஆண்டு தயாரிப்புக்கு வந்தவைகளாகும். ஐயாயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கு வீச்சு நடத்தும் இலக்குகளைக் கொண்டதாகும். பதினெட்டு விமானங்களையும் சேர்த்து அவுஸ்திரேலிய விமானப்படையில் இதே தரத்தில் 40 விமானங்கள் உள்ளன.

யுத்த விமானம் பாங்கொக்குப் பறக்கமுடியும். அங்கிருந்து அவுஸ்திரேலியாவில் வடகரையோரமும் தென்கிழக்காசியாவரை அதிர்வுடன் பறந்துசெல்லும்.

அவுஸ்திரேலியாவுக்கு அருகிலுள்ள இந்தோனேஷியாவில் பதினெட்டுக் கோடி மக்கள் வாழ்கின்றார்கள். அவுஸ்திரேலியாவின் இந்த படை பலத்தை இந்தோனேஷியா அச்சத்துடன் பார்க்கின்றது.

அவுஸ்திரேலியா தனது அண்டை நாடுகளுடன் சுமூக உறவைப்பேணி வளர்க்கவே விரும்புகின்றது என்று அறிவிக்கின்றது. ஆனால் எப்—111 யுத்த விமானங்களை கொள்வனவு செய்துள்ளது. அப்படியானால் அயல்நாடுகளிடம் புதிய சிந்தனை தோன்றுகின்றது என அவுஸ்திரேலியாவிலிருக்கும் இந்தோனேஷியா தூதுவர் சபாம் சியாகயான் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த பயம் அண்மையில் மேலும் அதிகரித்தது. அவுஸ்திரேலிய எதிர்க்கட்சியினர் நாட்டின் பாதுகாப்புப் பலத்தை மேலும் அதிகரிக்க வேண்டியதன் அதாவது இராணுவ வல்லமை குறித்துக் கரிசனை காட்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

அண்மையில் "பலமுடைய அவுஸ்திரேலியா" என்ற தலைப்பில் வெளியான அறிக்கையில் "அவுஸ்திரேலிய ராணுவம் கண்டத்தின் வடகரைப் பகுதியில் எதிர்த் தாக்குதல் நடத்தக்கூடிய இராணுவ வல்லமை கொண்டிருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பெரிய தீவான இந்தத் தீவு இயற்கை வளங்களையும் கொண்டுள்ளது.

இந்தியாவைவிட இரண்டு பங்கு பெரியதான இந்தத் தீவு ஒரு கோடியே 70 லட்சம் சனத்தொகையைக் கொண்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் விமானப்படையை நவீனமயப்படுத்தும் — விரைவுபடுத்தும் முடிவானது கிழக்காசியாவில் ஆயுத போட்டா போட்டியை அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதே சமயம் தைவானும் அமெரிக்காவிடமிருந்து எழுபது எப்—167 ரக யுத்த விமானங்களை கொள்வனவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

சீனா, ரஷ்யாவிடமிருந்து விமானங்களைக் கொள்வனவு செய்து தனது விமானப்படையை நவீனமயப்படுத்திவருகின்றது. மலேஷியாவும் ரஷ்ய, அமெரிக்க விமானங்களைக் கொள்வனவு செய்து ஆயுதப்படையை நவீனமயப்படுத்தவுள்ளது.

பாரம்பரிய ஆக்கிரமிப்பாளர்கள் யார்? அண்மையில் அவுஸ்திரேலியா பாதுகாப்புத் திணைக்களம் விடுத்த அறிக்கையில் இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளே அச்சுறுத்தல் நாடுகளென குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.


**S.Inplace Furniture**



Importers & Dealers
BUY DIRECT FROM FACTORY

VISIT OUR SHOWROOM

Δ 3 Pc. Living Room Set $ 1199
Δ 9 Pc. Dinning Room Set $ 1299
Δ 7 Pc. Pine Bedroom Suite $ 849
Δ 3 Pc. Living Suite $ 449 (Reg. $ 899)

MATTRESS & BOX
SINGLE $ 89
DOUBLE $ 149
QUEEN $ 179

BRING THIS COUPAN & GET 10% OFF ON REGULAR PRICE

BUSINESS HOURS
MON. - FRI. 10.00 A.M. - 8.00 P.M.
SATURDAY 10.00 A.M. - 6.00 P.M.
SUNDAY 11.00 A.M. - 5.00 P.M.

5633 FINCH AVE. EAST - # 6
(BESIDES GREENLANDS)
299 - 4544




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ம் பக்கத் தொடர்ச்சி

ளில் பல பாடல்கள் கண்ணதாசனின் பாடல்கள் என்றே பலராலும் நம்பப்படுகின்றது. அது கண்ணதாசனின் சாதனைக்கு ஒரு முக்கிய சான்றாகும். ஒரு காலத்தில் அடுக்கு மொழியில் யார் பேசினாலும் அது அண்ணாதுரையின் பேச்சு எனப்பட்டதை இதற்கு ஒப்பிடலாம்.

"நான் காவியத் தாயின் இளையமகன்" என ஒரு படத்திற்கு எழுதிய பாடலில் தன்னைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அவரது சில பாடல்கள் மொழி உணர்வையும் காதல் உணர்வையும் ஒருங்கே காட்டுவனவாக அமைந்துள்ளன.

"செந்தமிழ் தேன் மொழியாள் —
நிலாவெனச் சிரிக்கும் மலர்க்கொடியாள்"

என்ற பாடல் ஒரு காலத்தில் பெரும் புகழ்பெற்றது. அப்பாடலில் ஒரு வரி —

"கண்களில் நீலம் விளைத்தவளோ —
அதைக்கடலினில்கொண்டு கரைத்தவளோ"

என வருகிறது.

சாதாரணமாக கடலோடு கண்ணை ஒப்பிடுவது பெரிய கண்கள் என்பதற்காகத்தான். ஆனால் கண்ணதாசன் அவரது செந்தமிழ்த் தேன் மொழியாளின் கண்களைப்பற்றி வேறுவிதமாகக் கூறுகின்றார். கண்களில் நீல நிறத்தை விளைத்தவளாம். பின்பு அந்த நீல நிறத்தைக் கடலிலே கரைத்தவளாம். அவளது கண்களிலிருந்துதான் கடலுக்கு நீல நிறம் வந்ததாம்.

பாரதியின் கண்ணன் பாட்டுக்கள் கண்ணதாசனுக்குப் பெரிதும் பிடித்தமானவை. கண்ணதாசன் என்ற பெயருக்கேற்ப திரைப்படப்பாடல்களில் பெரும்பாலான பக்திப்பாடல்களை கண்ணன் பாடல்களாக எழுதியிருக்கின்றார்.

பாரதியின் கண்ணம்மா என் குழந்தையில் வரும் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" என்ற பாடலிலே உள்ள "உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி" என்ற வரிகளை பல்லவியாக்கி, கணவன் மனைவிக்கிடையே உள்ள பந்த பாசங்களை அழகான பாடலாக்கியிருக்கின்றார் கவிஞர்.

இதேபோல் "காயிலே புளிப்பதென்னே! கண்ணபெருமானே! நீ கனியிலே இனிப்பதென்னே... கண்ணபெருமானே என்ற பாரதி பாடலை —

"கண்ணிலே இருப்பதென்ன கன்னி இளமானே... காவியமோ ஓவியமோ கன்னி இளமானே..."

என்ற பாடலாக்கினார். இது "அம்பிகாபதி" படத்தில் இடம்பெற்றது.

**தத்துவப்பாடல்கள்**

கவிஞர் கண்ணதாசனின் தத்துவப்பாடல்கள் தனி மதிப்பைப்பெற்றவை. பட்டினத்தார் பாடல்களை வைத்து அவர் எழுதிய பாடல்கள் மட்டுமன்றி வேறு பல பாடல்களும் பிரபல்யம் பெற்று விளங்கின. "சட்டி சுட்டது கை விட்டது" என்ற பழமொழியை வைத்து "சட்டி சுட்டதடா... கைவிட்டதடா..." என்ற பாடலை எழுதினார் கவிஞர்.

இதேபோல் பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு ராச்சியத்தை ஆண்டுகொண்டு புரியாமல் இருப்பான் ஒருவன். அவனைப் புரிந்துகொண்டால் அவன்தான் இறைவன். என்ற பாடலும் தத்துவச் சிந்தனையை வெளிக்காட்டும் பாடலே.

காதல் பாடல்களில் கைதேர்ந்த கவிஞர் என வர்ணிக்கப்பட்ட கவிஞரின் பாடல்கள் மிகவும் சுவையானவை.

மிகவும் அந்நியோன்னியமான குடும்பத்தில் உள்ள கணவன் மனைவியின் ஒரே விதமான உணர்வை "நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேசவேண்டும்" என்று பாடினார்.

## கலைஞரும் கவிஞரும்

"சின்ன சின்ன ஊரணியாம்" என்று தொடங்கும் ஒரு பாடலில் "மாமரத்தின் கிளைகளிலே மாடப்புறா கூடுகளாம்..." என ஒரு முறை எழுதினார் கவிஞர் கண்ணதாசன்.

அதற்குக் கலைஞர் கருணாநிதி இப்படிப்பாடல் எழுதுவது பிழை என்று கூறி அதன் காரணத்தையும் விளக்கினார்.

மாடத்திலே கூடுகட்டி வாழ்வதால்தான் அதற்கு மாடப்புறா என்று பெயர். அந்தப் புறாக்கள் மரத்திலே கூடுகட்டுவதில்லை என்று அவர் விளக்கினார்.

கவிஞர் கண்ணதாசன் அதனை ஏற்றுக்கொண்டார். தனது பிழையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் தன்மையும் அவரிடம் காணப்பட்டது.

நல்ல பெரும் குறுங்காவியங்களையும், ஏராளமான தனிப்பாடல்களையும் பாடிய கவிஞர் பல சிறுகதைகளையும் நாவல்களையும் படைத்துள்ளார்.

அவரது அர்த்தமுள்ள இந்துமதம் கட்டுரைகள் பல பாகங்களாக வெளிவந்து பரபரப்போடு விற்பனையாகின. அவருக்குச் சமயத் துறையில் நல்ல பெயரையும் பெற்றுக்கொடுத்தது.

கவிஞரின் வேண்டத் தகாத சில தீய பழக்கங்களால் அவர் உடல்நிலை சோர்வடைந்து மரணத்தைத் தழுவிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன.

அகப்பட்டுக்கொண்ட தீய பழக்கங்களிலிருந்து விடுபடமுடியாமல் கவிஞர் தடுமாறியிருக்கின்றார். அவரே பல இடங்களில் இவைகளை எடுத்தியம்பியிருக்கின்றார்.

வித்தியாசமான பெண்களுடன் தொடர்புகள் வைத்திருந்த கவிஞர் போதை வஸ்துக்கும் அடிமைப்பட்டிருந்தார்.

இன்னும் சில காலம் அவர் உயிருடன் வாழ்ந்திருந்தால், எமக்கு அரும் காவியங்களை அளித்திருப்பார் என்பது உண்மையாகும்.


## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து!



**சோபிகா**

திரு. திருமதி. ஈஸ்வரன் — கலையரசி தம்பதிகளின் செல்வப் புதல்வி சோபிகா தனது இரண்டாவது பிறந்த தினத்தை 21.5.93 அன்று ஸ்காபுரொவிலுள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக்கொண்டாடினார்.

## மூன்றாவது பிறந்த நாள் வாழ்த்து!



**அனிதா**

திரு. திருமதி. கருணாகரன் — சயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி அனிதா தனது மூன்றாவது பிறந்த தினத்தை 21.6.93 அன்று தனது இல்லத்தில் சிறப்பாகக்கொண்டாடவுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்துவிட்டது!




**இந் நூலாசிரியை வல்லை கமலா பெரியதம்பியை பற்றி...**



அன்றொரு நாள் வல்லையில் பூத்தது ஒரு புதுமலர். மலராம் செல்விக்கு பெற்றோர் இட்ட பெயர் கமலவதனா. அன்னை சிவகாமி தந்தாள் தாய்த் தமிழை. தந்தை நாகமுத்து தந்தார் ஆங்கிலத்தை. இரு மொழிகளுடன் இசையும், இலக்கியமும் இளமலரின் இரு கண்கள் ஆயின. நூற்றுக்கணக்கான நூல்கள் செல்வியின் சிந்தனையைத் தூண்டின. ஓவியம், நாடகம் முதலிய இன் கலைகள் யாவும் அவளுக்கு வல்லை முத்துமாரி வழங்கிய வரங்களாயின.

பத்து வயதிலேயே பாடல்களோடு நாடகங்களும் இயற்றினாள் இளம் கலைச்செல்வி. பதினாறு வயதிலே பாவை பல சாதனைகளை படைத்தாள். இசை ஆசிரியை ஆனாள். இலங்கை வானொலிக் கலைஞரானாள். 'வீரகேசரி'யின் ஆதரவுடன் எழுத்தாளர் ஆனாள். இலக்கிய வானிலே தோன்றியது ஒரு இளம் தாரகை. எழுத்தாளர் வரிசையிலும் இடம் பெற்றாள் இசைச் செல்வி. நாளேடுகள், சஞ்சிகைகள் ஆகியன நல்லா தரவு நல்கின. 'சுதந்திரன்' பேட்டி கண்டு 'வதனா' என்னும் புனை பெயரில் எழுதிய கமலாவிற்கு 'கானக்குயில்' என்னும் பட்டத்தை வழங்கியது.

இல்லறம் புகுந்து கமலா பெரியதம்பியாக மாறி இசைக்கதைகளும் ஈழநாடெங்கிலும் நிகழ்த்தி, 'செந் தமிழ்ச் சொற் செல்வி' என்னும் விருதையும் பெற்றார் இந்நூலாசிரியை. அனுபவமும், ஆழ்ந்த சிந்தனையும் இவரது பல ஆக்கங்களுக்கு உயிர் ஊட்டின. வாசகருடன் நேரில் சென்று உரையாடி அவர்தம் உணர்வைத் தட்டி எழுப்பும் ஒரு தனிச்சுவை மிக்கது இவரது இயல்பான இன் தமிழ் நடை.

**பதிப்பகத்தார்.**

# அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் எதிர்பாருங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளின்டன் தலைமுடியால் விமானங்களுக்கு வந்த வினை...!

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் லொஸ் ஏஞ்சல்ஸ் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையில் தனது விமானத்தில் வைத்தே தலை மயிரை வெட்டிக்கொண்டதால் இரண்டு ஓடுபாதைகள் சுமார் ஒருமணி நேரம் மூடப்பட்டன. இதனால் அங்கு இறங்கவிருந்த விமானம் ஒன்று 17 நிமிட நேரம் வரை ஆகாயத்தில் வட்டமிட்டவண்ணம் இருக்க நேர்ந்தது. இதுபற்றி வாஸிங்டன் போஸ்ற் கிண்டல் செய்திருப்பதும். 'மக்களின் மனிதர்' என்ற கிளின்டனின் நிலையைப் பாதிக்கவில்லை என வெள்ளை மாளிகை அறிவித்தது. ஜனாதிபதியும் மற்றவர்களைப்போலவே தலைமயிரை வெட்டிக்கொள்ளவேண்டியுள்ளது. மிக அதிகமான அலுவல்களைக் கொண்டிருக்கும் அவருக்கு நேரம் போதாததே இதற்குக் காரணம் என வெள்ளை மாளிகை அதிகாரி ஸ்டெபனோ பொலஸ் கூறினார்.

நடுத்தரவர்க்கத்தின் நாயகன் என்ற கிளின்டனின் நிலை தேர்தலில் வெற்றிபெற அவருக்கு உதவியது என்பது குறிப்பிடத்தக்கது.

தனது பொருளாதாரத் திட்டத்திற்கு அடிமட்ட ஆதரவைப் பெறுவதற்காக கலிபோர்னியோ சென்றிருந்த கிளின்டன் தலைமயிர் வெட்டிக்கொள்வதற்காக வாஷிங்டன் பிரயாணத்தை ஒரு மணி நேரம் தாமதித்திருந்தார். இதனால் லொஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தின் 4 ஓடுபாதைகளில் இரண்டு அடைபட்டன. இதற்கு 56 நிமிட தாமதம் ஏற்பட்டதென



சமஷ்டி விமானப் போக்குவரத்து அதிகாரி ஒருவர் கூறினார்.

இதை அடுத்து அரிஸோனா ஜுமாவிலிருந்து வந்த பிரயாணிகள் விமானமொன்று 25 நிமிடம் தாமதித்தே தரையிறங்க முடிந்தது.

பாமடேலிலிருந்து வந்த மற்றோர் பிரயாணிகள் விமானம் 17 நிமிடங்கள் விமான நிலையத்திற்கு மேலே வட்டமிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் சில விமானங்கள் தரையிறங்க 10 நிமிடங்களுக்குமேல் தாமதம் ஏற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

# பிலிப்பைன்ஸில் உருவாகும் அமெரிக்க வாரிசுகள்!

## வாரிசுகளின் எண்ணிக்கை 9000!

அமெரிக்க கடற்படையினர் பிலிப்பைன்ஸை விட்டு அகன்றுள்ளபோதிலும் அவர்களுக்குப் பிறந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகளையும் அவர்களின் ஏழைத் தாய்மார்களையும் பரிதவிக்கும் நிலையில் விட்டுச் சென்றுள்ளனர் என பிரைன்டைன் சஞ்சிகை கூறியுள்ளது.

சுபிக் குடாவிலிருந்து அமெரிக்க கடற்படையினர் வெளியேறிய ஓராண்டுக்குப் பின் அவர்களுக்குப் பிறந்த குறைந்தது 9000 பிள்ளைகளும் அவர்களின் முன்னாள் விபச்சாரத் தாய்மார்களும் கஸ்டத்தில் இருப்பதாகக்கூறப்பட்டது.

கடந்த 40 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான அமெரிக்க கடற்படையினருக்கு சுபிக்குடாவுக்கு வெளியே உள்ள ஒலங்கா பொ என்ற மீன் பிடிக்கிராமம் பாதுகாப்பான வியசார பகுதியாகவிருந்தது. அமெரிக்க அரசாங்கம் இதை அறிந்தும் அங்கீகரித்தும் வந்துள்ளது.

அரசாங்கம் வைத்திய நிலையம் ஒன்றை அங்கு அமைத்து விபசாரிகளை சோதித்தும் வந்தது. (?) கடற்படையினர் வெண்வியாதியினால் பாதிக்கப்படாமல் இருக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமெரிக்க கடற்படையினருக்குப் பிறந்த பிலிப்பைன்ஸ் பிள்ளைகளுக்கு வைத்தியச் செலவு — இதர வசதிகள் ஆகியவற்றிற்காக பெரும்தொகை நஷ்ட ஈடு கோரி சான்பிரான்ஸிஸ்கோ வழக்கறிஞர் ஒருவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.




MONEY TRANSFER

Colombo - Singapore - South India

# ஸ்ரீ பரணி ஜுவலர்ஸ்

புத்தம் புது வடிவங்களில் அழகிய சிங்கப்பூர் நகைகள் — ஆடைகள் — அலங்காரப் பொருட்கள் — பரிசுப் பொருட்கள் ஆகியனவற்றை குறைந்த விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

**Birth Stone from Srilanka**

இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து உயர்ரக மாணிக்கக் கற்கள் — உங்கள் எண், பிறந்த நாள் பார்த்து மோதிரத்தில் பதித்துக்கொள்ள விரைந்து வாருங்கள்!

**2823 - Eglinton Ave. East**
(At Colombo Food Super Store)
**Scarborough**

**Tel: (416) 267 - 4141**
**Tel: (416) 267 - 0877**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளில் கடவுள் நம்பிக்கை அதிகரிப்பு! ஐந்தில் ஒருவரே நாஸ்திகர்!

மனித சரித்திரத்தில் ஒருபோதும் இல்லாத வகையில் உலகின் பல பாகங்களில் கடவுள் நம்பிக்கை இப்போது பலம் பெற்றிருப்பதாக ஆய்வு ஒன்றின்மூலம் தெரியவருகின்றது.

ஆனால் கிழக்கு ஜேர்மனியிலும் நெதர்லாந்திலும் நிலைமை மாறாகவுள்ளது.

மதகுருவும் நூலாசிரியருமான அக்ட்ரூ கிரீலியும் சிக்காக்கோ பல்கலைக் கழகத்தின் தேசிய கருத்து ஆராய்ச்சி நிலையமும் ஒன்றிணைந்து நடத்திய ஆராய்ச்சியின்படி முன்னாள் சோஷலிஸ்ட் ஐரோப்பிய நாடுகளில் கடவுள் நம்பிக்கை புத்துயிர் பெற்றுவரும் அறிகுறிகள் தென்பட்டுவருகின்றன. மதத்திற்கு மரண அறிவித்தல் எழுதுவது இன்னும் வெகுதூரத்தில் உள்ள விஷயம் என்பது தங்கள் ஆய்விலிருந்து தெரிவதாக கிரீலி கூறியிருக்கிறார்.

கடவுள் சாகவில்லை. சோஷலிஸத்தின் கீழும் அவர் சாகவில்லை. என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

முன்னாள் மேற்கு — கிழக்கு ஜேர்மனிகள், பிரிட்டன், ஹங்கேரி, இத்தாலி, ஐரிஷ் குடியரசு, வட அயர்லாந்து, நோர்வே, இஸ்ரேல், ஸ்லோவேனியா, நியூசிலாந்து, அமெரிக்கா, நெதர்லாந்து, போலந்து ஆகிய நாடுகளில் 19000 மக்களிடையே நடத்தப்பட்ட ஆய்வின்மூலம் இது தெரியவந்துள்ளது.

# மெக்ஸிக்கோவில் சீனர்கள் கைது!

மெக்ஸிக்கோவிலிருந்து தப்பியோடிய சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களான 100 சீனர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மெக்ஸிக்கோ எல்லைப்புற நகரான அமக்ஸிகாலியிலிருந்து இவர்கள் தப்பியோடியதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இங்குள்ள விமான நிலையம் ஒன்றிலிருந்து இவர்கள் தப்பியோடினர்.

எல்லையின் இரு மருங்குகளிலிருந்தும் எண்ணற்றோர் கைதுசெய்யப்பட்டதாக அமெரிக்க ரோந்துப் படையினர் எல் சென்ட்ரோ குடிவரவு மத்திய நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதமும் சீன சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விமான மார்க்கமாகத் திருப்பியனுப்ப எத்தனிக்கப்பட்டபோது சுமார் 200 பேர் தப்பியோடி காட்டுப்பகுதிக்குள் ஒளிந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தலைமறைவானவர்களில் எண்ணற்றோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# பிரெஞ்சு பொலிஸாரின் இனத்துவேஷம்!

ஒரு இந்தியரையும் — மொரீஸியஸ் வாசி ஒருவரையும் தாக்கிய குற்றத்திற்காக இரு பிரெஞ்சுப் பொலிஸாருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டன. சுக்தர் பரேக் என்ற இந்தியரும் விஜயவன் ஜகன்னாதன் என்ற மொரீஸியஸ் வாசியையும் கைகளாலும் — உலோகத் தடியினாலும் பொலிஸார் தாக்கியதாகக் கூறப்படுகிறது. குடித்துவிட்டுக் கார் ஓட்டியதாகக் கைதுசெய்யப்பட்ட இவர்கள் பொலிஸ் நிலையத்தில் தாக்கப்பட்டனர். சென்ற மாதம் ஒரு ஸையிரே வாசியும் — அல்ஜீரியா வாசியும் பிரெஞ்சுப் பொலிஸாரின் துப்பாக்கிகளுக்கு இரையானதும் அறிந்ததே!

## ஆஸ்திரேலியா ஒரு குடியரசு ஆகும் யோசனை!

# நியூஸிலாந்திலும் எதிரொலி!

ஆஸ்திரேலியா எலிஸபெத் மகாராணியை ஒதுக்கிவிட்டு ஒரு குடியரசாக உருவாகும் நிலை நியூஸிலாந்தில் எதிரொலியை ஏற்படுத்தவிருப்பதாக பிரதமர் ஜிம்போல் கர் கூறினார்.

பல ஆண்டுகளாக கருத்திலிருக்கும் இவ்விஷயம் பற்றி விவாதிக்கப்படவிருப்பதாக நியூசிலாந்துப் பிரதமர் கன்சர்வேட்டிவ் தேசியக்கட்சியில் உரையாற்றியபோது கூறினார்.

இம்மாதப் பிற்பகுதியில் ஆஸ்திரேலியப்பிரதமர் கீட்டிங் நியூஸிலாந்துக்கு விஜயம் செய்யும்போது குடியரசு பிரச்சினைபற்றி தாம் விவாதிக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் கீட்டிங்கின் தொழிற்கட்சி அரசாங்கம் 2001 ம் ஆண்டு ஆஸ்திரேலியாவை ஒரு குடியரசாக ஆக்குவது குறித்து ஆராய கமிட்டி ஒன்றை நியமித்திருக்கின்றது.

ஆனால் நியூஸிலாந்து ஒரு குடியரசாவதை மக்கள் தற்போது விரும்புவார்கள் எனத் தாம் கருதவில்லை என்றும் போல்கர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவிலிருந்து ஆசிய பசுபிக் பிராந்திய நாடாக மாறுவது ஒரு அம்சம். எனினும் மகாராணியை நிராகரிக்கும் அம்சத்தை இது பிரதிபலிக்கவில்லை எனக்கூறிய நியூஸிலாந்துப் பிரதமர் குடியரசாவதை தான் தனிப்பட்டமுறையில் ஆதரிக்கிறார் என்பதைக் கூறவில்லை.

இதற்கு முன் எடுக்கப்பட்ட பத்திரிகை வாக்கெடுப்பின்படி 56 சத விகித நியூஸிலாந்து மக்கள் தங்கள் நாடு குடியரசாவதை விரும்பவில்லை. 27 சதவிகிதத்தினர் குடியரசை ஆதரிக்கின்றார்கள்.

(ராய்ட்டர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனுக்கு மரியாதை கொடுப்பது தவறா?

## வினவும் தியாகராஜன்

> தந்தைமார்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகின்றேன். உங்கள் பையன்கள், அவர்கள் எத்தனை வயதுடையவர்களாகவிருந்தாலும் மரியாதை கொடுத்துக் கூப்பிடுங்கள். அந்த மரியாதையால் நமது மரியாதை நிச்சயமாகக் குறையாது. மாறாக நாளைய இளைஞர்களான அவர்கள் நல்ல குடிமக்களாக வருவதற்கு இது மறைமுகமாக உதவும்.



தியாகராஜன் — பிரசாந்த்

சென்னைத் தொலைக்காட்சியில் சமீபத்தில் 'வாரிசுகள்' என்ற தலைப்பில் நடிகர் தியாகராஜனும் அவரது மகன் பிரசாந்தும் பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஒளிபரப்பினார்கள்.

தியாகராஜன் தன் மகனை 'அவர்', 'இவர்', 'நீங்கள்' என்று மரியாதையுடன் அழைத்துப்பேசினார். இது செயற்கையாகவிருந்தது. எந்த தந்தை மகனுக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கின்றார்? என்று பலரும் கேட்டனர்.

இதுகுறித்து தியாகராஜனிடம் விளக்கம் கேட்கப்பட்டபோது மனிதர் பொரிந்து தள்ளிவிட்டாராம்!

"சில வருடங்களுக்கு முன்பு எனக்குத் தெரிந்த தமிழ் பேராசிரியர் ஒருவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அவர் தனது பத்து வயது மகனை 'வாங்க... போங்க...' என்று அழைத்தார். என்னைப் பொருத்தவரை ஆச்சிரியமான விடயமாக எனக்குப்படவில்லை. காரணம் எனது மகன் பிரசாந்தை சின்ன வயதிலிருந்தே நான் மரியாதை கொடுத்துத்தான் கூப்பிடுவேன். இது என்னுடன் பழகியவர்களுக்குத் தெரியும்.

வளர்கின்ற குழந்தைகளுக்கு இப்படி நாம் மரியாதை கொடுத்து அழைப்பது அவர்களிடத்தில் தன்னம்பிக்கையை வளர்க்கும் என்பது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

'தோளுக்குமேல் வளர்ந்துவிட்டால் தோழன்' என்பார்கள். அதனால் அவர்களை எப்படி மரியாதை கொடுத்து அழைக்கின்றோமோ, அந்த அளவு தன்னம்பிக்கையை அவர்களிடத்தில் எதிர்பார்க்கலாம்"

ஒருமுறை நானும் பிரசாந்தும் சிவாஜி சாரை சந்திக்கச் சென்றிருந்தோம்.

பிரசாந்தைப் பார்த்ததும் 'வாங்க சார்... எப்படி இருக்கீங்க...? நீங்கள் நல்லா நடிக்கிறீங்க... உங்கள் வைகாசி பொறந்தாச்சு பார்த்தேன். நல்லா டான்ஸ் ஆடுறீங்க...' என்று மரியாதை கொடுத்துப் பேசினார்.

எவ்வளவு பெரிய கலைஞர் அவர். அவரே அப்படி பிரசாந்தை அழைத்தபோது நான் ஆச்சரியமடைந்தேன். அவரிடமே இதுபற்றி "என்ன சார் பிரசாந்தை வாங்க... போங்க என்று கூப்பிடுகின்றீர்கள்...?" — எனக்கேட்டேன். அதற்கு சிவாஜி சார் சொன்ன பதில் —

"வயதில் பிரசாந்த் என்னைவிட சிறியவராக இருக்கலாம். ஆனால் இன்று அவர் என் சக கலைஞர். சக நடிகர் என்ற முறையில் அவருக்கு மரியாதை தருவது எப்படி தவறாகும்?... நீங்களும் இனிமேல் அவரை 'வாடா...போடா...' என்று கூப்பிடாதீர்கள் என்றார். நான் எனது வழக்கத்தைச் சொன்னேன்.

"அதுதான் சரி... அதைத் தொடருங்கள்..." என்றார். இந்தச் சம்பவம் என்னை ரொம்பவும் பாதித்தது. வீட்டிற்குள் மரியாதை இருந்தால்தான் வெளியில் மரியாதை கிடைக்கும். நான் என்னைவிட வயதில் குறைந்தவர்களை 'மிஸ்டர்' என்றே அழைப்பது வழக்கம். இது எனது இயல்பான விஷயம். இதில் செயற்கைத்தனம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தொலைக்காட்சியில் 'வாரிசுகள்' பற்றிய ஒளிபரப்பில் சிவாஜி — பிரபு, நாகேஷ் — ஆனந்தபாபு, சௌகார் — வைஷ்ணவி என்று பலரும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்குகொள்வதாகத்தான் முதலில் என்னிடம் தெரிவித்தனர். சமீபகாலமாக நான் பிரசாந்துடன் இணைந்துவரும் புகைப்படங்களைக்கூட தவிர்த்துவருகின்றேன்.

பல கலைஞர்கள் பங்கு பெறுகின்றார்கள் என்பதால்தான் இந்த நிகழ்ச்சிக்கு ஒப்புக்கொண்டேன். என்னைப்பற்றி விளம்பரப்படுத்திக்கொள்ள நிச்சயம் நான் உபயோகப்படுத்தவில்லை.

அத்துடன் அன்று சினிமாவைப்பற்றி நானும் பிரசாந்தும் அலசியிருந்தால் பல சர்ச்சைக்குரிய விஷயங்கள் வந்திருக்கும்.

ஆனால் அவரிடமிருந்து பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், ரசிகர்களின் சில சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளவும், இந்த நிகழ்ச்சி உபயோகமாக இருந்ததாக பிரசாந்தின் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

எங்களைப் பிடிக்காதவர்களுக்கு வேண்டுமானால் அன்றைய நிகழ்ச்சி செயற்கையாகவும், தற்புகழ்ச்சியாகவும், இருந்திருக்கலாம். மெட்றாஸ் பாஷையில் "வா... நைனா... போ நைனா..." என்று பேசிப்பழகியவர்களுக்கு இந்த உரையாடல் கூசிக்கூட இருக்கலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் என்னைப்போன்ற 'தந்தை' களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகின்றேன். தங்களது பையன்கள், அவர்கள் எந்த வயதாகவிருந்தாலும் மரியாதை கொடுத்துக் கூப்பிடுங்கள். அந்த மரியாதையால் நமது மரியாதை நிச்சயமாகக்குறையாது.

<u>மாறாக நாளைய இளைஞர்களான அவர்கள் நல்ல குடிமக்களாக வருவதற்கு இது மறைமுகமாக உதவும்."</u>



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சிவா ஜுவலறி

721 Bloor St. West, Suit 2C, Toronto, Ontario

Tel: (416) 531-4867

பேன்சி பூக்கடை

தமிழ், கிறிஸ்தவ அன்பர்களின் திருமணத்திற்குத் தேவையான
Flower Arrangements, Church Decorations, Corsages,
Boutonniere, Bridal
Bouquet, Flower Baskets முதலிய அனைத்தையும்
பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பூஜைக்குத் தேவையான
TSR Brand சந்தனம், பன்னீர், பழநி விபூதி, அருவன் புல்,
மாவிலை, வாழையிலை முதலியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

திருமணத்திற்குத் தேவையான தலை
நகை, தலைப்பாகை, மண்டப
அலங்காரம், இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய
முத்து மணவறை, கதிரைகள்,
மேசைகள், அனைத்தையும் ஒரே
இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தொடர்புகளுக்கு இரண்டு இடங்கள்

FANCY FLORIST

**1668 Victoria Park Ave.,**
**(Two Blocks North of Eglinton)**
Princess Plaza
**(416) 288 - 1419**

**460 - Elgin mills Rd.**
(கணேசா கோவிலுக்கு அருகாமையில்)
Richmond Hills
**(416) 770 - 5382**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர்... தண்ணீர்

## உலக சமாதானத்தைச் சீர்குலைக்கும் இன்றைய மிகப் பெரிய பிரச்சினை!

உலக நாடுகளை இன்று அச்சுறுத்திவரும் மிகப்பெரிய பிரச்சினைதான் தண்ணீர் பிரச்சினை. உலக மக்களில் 40 சதவீதமானோர் தேவைக்குப்போதிய தண்ணீர் இல்லாமையால் இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மக்களுக்குத் தலையிடியைக்கொடுத்து வரும் 90 சதவீத நோய் துன்பங்களுக்கு மூல காரணம் சுத்தமான தண்ணீர் கிடைக்காமையே...!

உலகில் வாழும் மக்களில் ஒரு கோடி 50 லட்சம் மக்கள் அருந்துவதற்குச் சுத்தமான தண்ணீர் இன்றி அவதியுறுகின்றனர்.

தண்ணீர்த் தட்டுப்பாடு எதிர்காலங்களில் யுத்தங்களையும்கட்டவிழ்த்து விடலாமென நிபுணர்கள் கூறுகின்றனர்.

தண்ணீர்ப் பிரச்சினையை எதிர்காலத்தில் நாம் எப்படிச் சமாளிக்கப்போகின்றோம் என்பது குறித்து இப்போதே சிந்திக்க ஆரம்பித்தல் வேண்டும். இந்தச் சிந்தனைக்கு இடம் கொடுக்கத்தவறினால் உலக சமாதானம் சீர்குலைந்துவிடும்.

ஆபிரிக்காவில் நிலவும் கடும் வரட்சி காரணமாக 14 கோடி மக்கள் பட்டினிக்கொடுமையால் செத்து மடியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள செனகல் ஆறு வற்றி வரண்டுள்ளது. செனகல், மொரிடானியா, மாலி ஆகிய நாடுகளுக்கு நீர்பாய்ச்சும் செனகல் ஆறு வற்றிவிட்டமை மற்றுமொரு நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

செனகல், மொரிடானியா, மாலி ஆகிய மூன்று நாடுகளிலும் உள்ள சில கிராமங்களின் எல்லைப் புறங்களில் வாழும் 40 சதவீதமானோர் வசிப்பிடங்களைவிட்டு வெளியே றியுள்ளனர். சூழல் பாதிப்பினால் அகதியானவர்கள் என இவர்கள் கருதப்படுகின்றார்கள்.

சூழல் பாதிப்படைவதும் மக்கள் பெருக்கத்தால் ஏற்படும் நெருக்கடிகள் என்பனவும் பேராபத்தை விளவிக்கக்கூடியன. இந்த ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு இப்போதிருந்தே ஆவன செய்யப்படவேண்டும். இதற்கு உலகத் தலைவர்கள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஐ.நா. அபிவிருத்தித்திட்ட ஆலோசகரான ரொஜர் பேர்த்லொட் தண்ணீர் தட்டுப்பாட்டினால் உருவாகும் அபாயம் குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

எதிர்காலத்தில் ஏற்படவுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் நடவடிக்கை குறித்து இப்போதிருந்தே நாம் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்கத் தவறக்கூடாது. அவ்வாறு தவறினால் அது திடீர் அழிவுக்கு வழிகோலும் என பேர்த்லொட் எச்சரித்துள்ளார்.

பிரான்ஸில் சோபியா அன்டி போலீஸ் என்னுமிடத்தில் நடைபெற்று முடிந்துள்ள சர்வதேச மாநாடு ஒன்றில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இங்கு குழுமி இருந்தவர்களில் பலரும் பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டனர். 21 ம் நூற்றாண்டில் தண்ணீர் தட்டுப்பாடு உலகின் முக்கிய பரச்சினைகளில் ஒன்றாக அமைந்துவிடும். இப்போதிருக்கும் தண்ணீர் தேவையுடன் ஒப்பிடும்போது 21 ம் நூற்றாண்டில் இதுபோன்று பத்துமடங்கு நீரினை மக்கள் பயன்படுத்த வேண்டியிருக்கும் இவ்வாறு வேறு ஒரு பிரதிநிதி கூறினார்.

ஜோர்தான் நாட்டு நீரைப் பங்கிட்டுக்கொள்வது குறித்த பரச்சினைக்கு மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது.

ஜோர்தான் — சிரியா — இஸ்ரவேல் கைப்பற்றப்பட்ட மேற்குக் கரையோர எல்லைப் பகுதிகளினூடாக ஜோர்தான் ஆற்றுநீர் ஓடுகிறது.

1967 ம் ஆண்டு மேற்குக் கரையோரப் பகுதியை இஸ்ரவேல் கைப்பற்றியது. இதன்பின் முதல்தடவையாக இஸ்ரவேலும் பலஸ்தீனும் நேரடிப் பேச்சவார்த்தைகளை எதிர்வரும் அக்டோபரில் பெத்லகேமில் நடத்த உள்ளன.

இவ்வேளையில் சர்ச்சைக்குரிய மற்றொரு பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மேற்குக் கரையோர மலைப்பிரதேச சரிவுகளுக்கூடாக இஸ்ரவேல் தரைப் பிரதேசத்துக்குப் பாயும் நீரினால் உருவாகியுள்ள சர்ச்சை தீர்க்கப்படவேண்டிய நிலையிலுள்ளது.

பிராந்தியத்தின் அமைதி இன்மைக்கு சமாதானம் சீர்குலைவதற்கு தண்ணீர் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளும் முக்கிய காரணங்களாக உள்ளன.

இதனால் எதிர்காலத்தில் தண்ணீரின்றி அவதியுறும் நிலையைத் தவிர்க்க உலகத் தலைவர்கள் இப்போதிருந்தே ஒரு சிறந்த முடிவை எடுப்பது அவசியம்.

அண்மையில் நமது நாட்டில் நிலவிய கடும் வரட்சி காரணமாக பல்வேறு அசௌகரியங்களை நாமும் எதிர்நோக்க நேர்ந்தது. தொடர்ந்தும் வரட்சி எம்மைவிட்டு முற்றாக நீங்கிவிட்டது என்பதற்கல்ல.

இந்த நிலையில் இந்திய உபகண்டத்திலும் தண்ணீர் பிரச்சினை தொடர்ந்தவண்ணமேயுள்ளது. இராஜஸ்தான் — ஒரிஸா மக்கள் நாளாந்தம் தண்ணீர் போராட்டத்துடனேயே நாட்களை நகர்த்துகின்றனர்.

அண்மையில் தமிழ்நாடு மாநிலத்துக்கும் கர்நாடகாவுக்கும் இடையில் எழுந்த சர்ச்சையும் அதனால் பலர் பலியான நிகழ்வுகளும் கூட காவேரி நீர் பிரச்சினை காரணமாகவே எழுந்தன.

இயற்கையை சீரான முறையில் பேணும் சந்தர்ப்பத்திலேயே வரட்சியை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். இல்லையேல் வரட்சியின் பிடியிலிருந்து தப்புவது கடினமாகிவிடும்.


விமல் திருமண சேவை

உங்கள் தேவை எங்கள் சேவை

கனடாவில் நீண்டகால அனுபவம்
உள்ள எம்மால் உங்களுக்குச் சிறந்த
தகுதியான
மணமகன் — மணமகளை
ஜாதகப் பொருத்தப்படி
இணைத்துத் தரமுடியும்.

மங்களகரமான திருமண வாழ்வை பூரண
திருப்தியோடு நிறைவு செய்வதற்கு எமது
சேவை புனிதமாகவிருக்கும்.

தொடர்புகட்கு — இந்திரன்
(416) 855 - 3496

தமிழ் மக்களுக்கோர் நற்செய்தி!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பங்களுக்கெல்லாம் பெரிய துன்பமானது... இன்பங்களுக்கெல்லாம் பெரிய இன்பமானது...

பகிர்ந்து கொள்பவர் – யசோதா கமலேஸ்வரன்

கண்ணுக்கு அணிகலம் ஆபரணம்
கண்ணோட்டத்திற்கு அணிகலம் தாட்சண்யம்
காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி
வாக்குக்கு அணிகலம் சத்தியம்
கரத்திற்கு அணிகலம் தானதருமம்
மனதிற்கு அணிகலம் தியானம்

நீ உடம்பை வளர்க்க முயற்சி செய்வதோடு உயிரையும் வளர்க்க முயற்சி செய். ஏனெனில் உயிர் சிறந்தது. உயிர் இல்லாத உடம்பை யாரும் பேணுவதில்லை. உயிர் நீங்கியவுடனே உடம்பை மண்ணிலே புதைத்து விடுகின்றனர். ஆதலினால் இந்த உடம்புக்குள் உறையும் உயிருக்கு உறுதி தேடு.

நல்ல உணவுகளை உண்பதனால் உடல் வளரும். நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதால் உனது உயிர் வளரும்.

ஆதலினால் உடம்பையும் உணர்ச்சியையும் உயிரையும் வளர்த்துக்கொள்.

அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த ஆன்றோர்களைத் துணையாகக்கொண்டு ஒழுகு. அதனால் உனது வாழ்வு உணர்ச்சியுறும். துன்பத்தில் அமுந்த மாட்டாய்.

கொடியானது உயர்ந்த மரத்தைப்பற்றிச் சுற்றிக்கொள்ளுமானால் வானம்வரை உயர்கின்றது. இல்லையேல் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகின்றது.

நீ எப்போதும் பெரியோரைத் துணைகொள். கல்லின் தன்மை தண்ணீரில் முழுகிவிடுவது. கட்டையின் தன்மை தண்ணீரில் மிதப்பது. சிறிய கல்லோ பெரிய கல்லோ தண்ணீரில் போட்டால் தண்ணீருக்குள் முழுகி அழிந்துவிடும்.

ஆனால் ஒரு கல்லை படகு மேல் வைத்தால் கல் தண்ணீரில் மிதந்து செல்கின்றது. அதுபோல் அறிவாற்றலால் ஆன்ற பெரியோர்களை நீ அடுப்பாயானால் உனது அறிவாற்றலுக்கு இயலாத கருமங்களை நீ செய்து முடிப்பாய்.

துன்பங்களுக்கெல்லாம் பெரிய துன்பமானது அறிவில்லாதவர்களோடு பழகுவதேயாகும். இன்பங்களுக்கெல்லாம் பெரிய இன்பமானது அறிஞர்களோடு பழகுவதே.

அறிஞரோடு பழகும்போது உண்டாகும் இன்பம் இமையவருலகிலுமில்லை. மொழிக்கு மொழி தித்திக்கும் இனிய மொழிகளும், அறிவுரைகளும் அறிஞரிடம் உண்டாகின்றன. அவற்றால் உன் உள்ளம், உயிர், உணர்ச்சி ஆகிய அனைத்தும் குளிரும்.

நிரம்பவும் படிப்பதைவிட, படித்தபடி நின்று ஒழுகுவதற்கும் முயற்சி செய். படிப்பது உணவு உண்பதுபோல், ஒழுகுவது உண்ட உணவு செரிப்பதுபோல். உணவு நிரம்ப உண்டாலும் செரிக்கவில்லையானால் என்ன பலன்? செரிக்காத உணவு துன்பஞ் செய்கின்றதன்றோ? ஆதலினால் சிறிது கற்றாலும் கற்றவண்ணம் நிற்கவேண்டும்.

ஓதலில் நன்று ஒழுக்கமுடைமை. உனக்கு 'சரி' என்று பட்டதையே 'சரி' என்று முடிவுகட்டாதே!

இன்று சரி என்று உனக்குத் தோன்றிய ஒன்றே நாளை 'தவறு' என்று தோன்றும்.

உனது அறிவு வளர்கின்ற அறிவு. பூரணமாக வளர்ந்து அருளறிவு பெற்ற தீர்க்கதரிசிகள் கூறிய நியதியையும், நியாயங்களையும் கடைப்பிடித்து வாழ்வாய்.

பால் தயிராகி... தயிரில் வெண்ணெய் தோன்றி வெண்ணெய் நெய்யாகின்றது. பஞ்சு நூலாகி, நூல் நீள ஆடையாகி, ஆடை சட்டையாகின்றது. அரும்பு... மலர்... காய்... கனி...

இவைபோல் ஆசை — பற்று — அன்பு — அருள் என்பவை உள்ளத்தில் எழுபவை. ஆசை பற்றாகி... பற்று அன்பாக மலர்ந்து... அன்பு அருளாகிப் பழுக்கின்றது.

ஆசையுடையவன் அரக்கன். பற்றுடையவன் விலங்கு. அன்புடையவன் மனிதன்.

அருளுடையவன் தெய்வம். பிறரைக் கெடுத்து தான்மட்டும் வாழவேண்டும் என்ற எண்ணம் ஆசை. தான்மட்டும் வாழவேண்டும் என்ற எண்ணம் பற்று. தானும், தன் இனமும், தன்நாடும் வாழவேண்டும் என்ற எண்ணம் அருள். சராசரம் எல்லாம் வாழவேண்டும் என்ற எண்ணம் அருள்.

இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருளவேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்கவேண்டும்.

குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருவருப்புக் கொள்வாயன்றோ?

அதுபோல் காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்களை நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்கமாட்டான்.

ஆனபடியால் சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி, அன்பு என்ற சந்தனம் தெளித்து, அறிவு என்ற விளக்கேற்றி உண்மை என்ற தூரம் கமழவை. இறைவன் எழுந்தருளவான்.

இறைவனிடம் நீ நின்று அன்பு செய்யும்போது ஆண்டவனே உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற அருள் புரிவீர் என்று வேண்டு. அப்படியின்றி என்னைக் காப்பாற்று என்று வேண்டுவாயானால்... அவ்வுயிர்களில் நீயும் ஒருவன்தானே...!


ஸ்ரீ லலிதாம்பாள்
வைதீக சமாஜம்
SRI LALITHAMBAL
VAITHEEHA SAMAJAM



திருமணம், பதிவுத் திருமணம், வீடு குடிபுகுதல், கடை திறப்புவிழா, புண்யாக வாசனம், திதி, பூப்புனித நீராட்டுவிழா, நவக்கிரஹ ஹோமம், சர்ப்ப சாந்தி, சத்திய நாராயண பூஜை போன்றவற்றை வேத ஆகம விதிப்படி செய்துகொள்ளவும்
இத்துடன்
புத்தம்புதிய முத்துமணவறை, மாலைகள், ஆண்டாள் மாலை, சடைநாகம், தலப்பாகை, தலைநகை போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளவும்

ஈஸ்வரன் ஐயர்
(Hindu Priest & Marriage Registrar)
51, Penmarric place
Scarborough - Ontario
(416) 297 - 8604




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் கவிதையும்

சின்னையா சிவநேசன்

நூல் — வாழ்க்கையும் கவிதையும்
ஆசிரியர் — கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா
வெளியிட்டோர் — செஞ்சரி ஹவுஸ், பிரித்தானியா

கவிதை என்பது மனிதனின் அதீத உணர்ச்சியின் வெளிப்பாடு என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். சிலர் பிறப்பால் கவிஞர்கள். சிலர் முயற்சியால் கவிஞர்கள். பேராசிரியர் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்.

பேராசிரியர் மகாதேவாவின் கவிதைத் தொகுதியை வாசித்து அவரது மனக் கிடக்கையை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அண்மையில்தான் கிடைத்தது. எனவே என் மனதில் எழுந்த எண்ணங்களை காய்தல் உவத்தல் இன்றி வெளிப்படுத்த விரும்புகின்றேன். கவிதைத் தொகுதி 1951 ம் ஆண்டு தொடக்கம் 1991 ம் ஆண்டு வரைக்கும் அவ்வப்போது எழுதிய கதைகளின் தொகுப்பு என்பதைப் பார்க்கும் பேராசிரியரின் முயற்சியை போற்றாமல் இருக்க முடியாது. கவிதைகள் பொதுவாக உணர்ச்சி மேலீட்டால் எழுதப்பட்டவை என்பது புலனாகின்றது.

இத்தொகுதியில் 51 பாடல்களும், 10 மொழி பெயர்ப்புப் பாடல்களும், பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு கூறும் நெடுங்கவிதையும் இடம்பெற்றுள்ளன. இவை அன்னாரின் 40 ஆண்டுகாலப் பொக்கிஷம். இது ஓர் அரிய முயற்சி. இதனை அழகான அச்சில் அதற்கே சிறப்பான அட்டையுடன் கையடக்கமான நூலாக அச்சுப்பிழை ஏதுமின்றி 'செஞ்சரி ஹவுஸ்' நிறுவனத்தார் வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது.

மேலும் பாக்கள் பாடப்பட்ட ஆண்டும், எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டன என்பதும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளது தமிழக்கவிதை நூற் பிரசுரத்தில் ஓர் புதிய வரவேற்கத்தக்க முயற்சி. அடுத்து மொழி பெயர்த்த ஆங்கிலக் கவிதைகளையும் மொழிபெயர்ப்புப் பாக்களோடு தந்திருப்பது இன்னுமொரு புதிய முயற்சி. மேலும் யாவருக்கும் தெரிந்த ஜன ரஞ்சகமான குழந்தைப் பாக்களையும் தமிழில் தந்திருப்பதும் ஒரு சிறப்பான அம்சம். எனவே சிறியோரும் பெரியோரும் படித்து இன்புற இந்நூல் உதவும் என்பதில் ஐயமில்லை.

இனி என் மனதைக் கவர்ந்த பாடல்கள் சிலவற்றைப் பார்ப்போம். கவிதை இலக்கண முறைப்படி பாடல்கள் அமைந்துள்ளனவா என்பதனைப்பற்றி நான் கவலைப்படவில்லை. வாசிக்கும்போது தங்கு தடங்கலின்றி குழாயிலிருந்து நீர் கொட்டுவது போன்று கொட்டுகிற கவிதைகளைப் படித்து இன்புற்று, நன்கு சுவைத்து அனுபவித்தவற்றைப்பற்றியே இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

முதலில் 1960 ம் ஆண்டில் "தாய் மாமனாருக்கு அஞ்சலி" என்ற பாடலைப் பார்ப்போம். யாழ் மாவட்டக் கிராமம் ஒன்றின் அன்றைய நிலையைப் படம்பிடித்துக்காட்டும் ஓர் அற்புதப்படைப்பிது. நன்றிக்கடன் செலுத்துவதோடு நில்லாமல் தொழிலின் மகத்துவத்தையும் தனது சிறு பராய வாழ்க்கையையும் அப்படியே படம்பிடித்துக்காட்டி வாசகர் மனதில் ஓர் இடம்பிடித்துக்கொள்கின்றார் கவிஞர். கவிதை ஓட்டமும் சொற்செறிவும் கவிஞரின் தமிழறிவின் ஆழத்தை வெளிக்காட்டுகின்றன. இதில் பின்வரும் வரிகள் வாசகர் மனதைவிட்டு அகலாதவை. நகர்ப்புறச் சூழலில் வாழ்ந்து வளர்ந்த இளஞ் சந்ததியினர் அறிந்துகொள்ள வேண்டியவை —

பெற்ற பிள்ளைகள் ஐவரைப் போன்று
பேணி அணைத்துப் போற்றியும் அடித்துச்
சாணி அள்ளிச் சுமக்கச் செய்தும்
வேலி அடைத்தல் தேங்காய் உரித்தல்
பேதி அரைத்தல் புல்லுப் பிடுங்கல்
கூரை வேய்தல் ஏர் பிடித்துழுதல்
புகையிலை பிரித்துப் பட்டடை அடுக்கல்
எந்த வேலையும் இழிவில்லை. துரை
தெரிந்து வைத்துத் திறம்படச்செய் எனத்
தொழிலின் மகிமை தெளிந்திடச்சொல்லி....

எனக் கவிதை நீண்டுகொண்டே போகின்றது. நூலை வாங்கி நீங்களும் அனுபவிக்கலாம்.

இனி ஒரு மொழி பெயர்ப்புப் பாடல் ஒன்றைப் பார்ப்போம். உருது மொழிக்கவிதை ஒன்றின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழ் கவிதை பிறந்துள்ளது. வறுமையின் கோரப்பிடியில் வாடிய ஒரு முடவனின் கடைசிக்காலத்தை அப்படியே கண்முன் தருவது போன்ற மனதைவிட்டகலாத பாலிது. கவிஞருக்குள்ள ஆங்கில மொழி, தமிழ் மொழிப் பாண்டித்தியம் இக்கவிமூலம் கொடிகட்டிப் பறக்கிறது. மேலும் "விடிவின் முக்காடு" என்ற தலைப்பு இதற்கு சிகரம் வைத்தாற்போல் சிறப்பாய் அமைந்துள்ளது.

அடுத்து நாம் கவனிக்க வேண்டிய பாடல் காதல் இழையோடும் "பசி போக்கக் காத்திருக்கும் கிராமத்துப் பெண் ஒருத்தி" — என்ற பாடல். இது தோழிக்குக் கூறுவதுபோல் அமைந்துள்ளது. வேலைக்குப்போன மச்சான் வீட்டை லரவில்லை என்ற ஏக்கத்தை தோழிக்குக் கூறுகிறாள் — இப்பாடல் கிராமப்பண்புகளை எடுத்துக் கூறுகிறது. மண் வாசனை வீசுகின்ற பாடல். தமிழர்தம் காதல், கல்யாணம், ஏக்கம் என்ற இன்னோரன்ன பண்புகள் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

மானே மயிலே இனமே, மாமி தந்த மாம்பழமே
தேனே என் தமிழ்க் குயிலே தெவிட்டாத கரும்பணியே
ஊனே தான் ஒரு நிமிடம் உனைக்காணாக்கண் என்பார்
தானே தான் தவிக்கிறதோ தனி ஆளாய்த் தோட்டத்தே

இவையெல்லாவற்றையும் சுவைத்தவர்களுக்குத்தான் அவற்றின் அருமை விளங்கும். மேலும் அண்மையில் மணம் முடித்த ஒருத்தி, கணவனைக்காணாமல், படும் அவஸ்தை — அங்கலாய்ப்பு — ஆவல் யாவும் நன்கு வெளிப்படுகின்றன.

இறுதிப் பந்தியில் கணவன் வருவதைக்கண்டதும் தோழி பொன்னம்மாவைத் துரத்தியடிக்கும் பாங்கு நாடகப் பாணியில் அமைந்திருப்பது அழகாகவும் இரசிக்கும் படியாகவும் உள்ளது. இது கவிஞரின் நாடக அனுபவத்தையும் வெளிக்காட்டுகிறது.

ஆத்தடியில் கைப்பிடித்த ஆசை மச்சானைக்காணக்
காத்திருந்து களைச்சிட்டேன், கால் இரண்டும் நோகுது
நேத்தும்... அவர்... பொன்னம்மா... நீ... அப்ப... போ... பின்...
பார்த்திடுவோம், வா மச்சான் பசிக்கிறதோ? ஏன் சுணக்கம்?

என்று கணவனை வரவேற்கும் பாணி, கித்துல் பாணியைப்போன்று இனிக்கிறது. இங்கு கவிஞர் கொடிகட்டிப்பறக்கிறார். வேண்டும் இதுபோன்ற பாடல்கள் இன்னும்.

இது போன்ற பல அருமையான பாடல்கள் இக்கவிதைத் தொகுப்பில் உள்ளன. இது கட்டாயம் நம் இல்லங்களில் இருக்கவேண்டிய ஒரு நூல். இடைக்கிடை சில பாடல்கள் வலிந்து பாடப்பட்டவை போல் அமைந்துள்ளன. உதாரணமாக "குறைப்படம்" என்ற கவிதையைக் கூறலாம். இதுபோன்ற சில கவிதைகளைத் தவிர்த்திருக்கலாம்.

"நாளைய ஈழத்திலே" என்ற கவிதையும் சிறப்பாய் அமைந்துள்ளது.

மொத்தத்தில் இக்கவிதைத் தொகுதி வரவேற்கத் தக்க, பாராட்டத்தக்க முயற்சி. யாவரும் வாசித்துப் பயன்பெறவேண்டிய நூல்.

## கனடாவில் இம்மாதம்

வல்வை கமலா பெரியதம்பியின் சிறுகதைத் தொகுதியும் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவாவின் கவிதைத் தொகுதியும் கனடாவில் இம்மாதம் வெளியாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெமினி மார்க்கட்

Markham & Eglinton சந்திப்பில்

என்றும் எதுவும் மலிவு விலையில்

உங்களுக்குத் தேவையான இலங்கை — இந்திய — கனேடிய உணவுப் பொருட்கள், உடன் மரக்கறி — பழ வகைகள் — உடன் இறைச்சி — மீன் மற்றும் கடலுணவுப் பொருட்கள், பால் உணவு வகைகள் என்பனவற்றையும், சமையல் பாத்திரங்கள் — இலங்கை, இந்திய, கனேடிய பத்திரிகைகள் — சஞ்சிகைகள் மற்றும் தேவையான அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

**Gemini Market**

Tel. [416] 265 - 1010 Fax. [416] 265 - 7410

3230 Eglinton Ave. East At Markham
Scarborough - Ontario - M1J 2H6

# DELUXEN JEWELLERY



BIRKDALE PLAZA

7 நாட்களும் திறந்திருக்கும்

நீங்கள் விரும்பும் தங்க நகைகளை மாற்றுக் குறையாத தங்கத்தில் வேண்டிய வடிவமைப்பில் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

## டிலக்ஷன் ஜுவலறி

TEL. (416) 759 - 9393
TEL. (416) 759 - 0557

1247 ELLESMERE RD.,
Scarborough - Ont. M1P 2X8

# ஏசியன் சலூன்

ரொரன்ரோவிலும் ஸ்காபுரோவிலும்

கனடாவில் தமிழர் நிர்வாகத்தில்
இயங்கும் சிகையலங்கார நிலையம்.

சிறந்த பயிற்சியும் — அனுபவமும் நிரம்பப்பெற்ற நாம் உங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்வோம் என மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம். தமிழ் நங்கையர்கள் தங்கள் விருப்பங்களுக்கேற்ற முறையில் எமது ஸ்காபுரோ ஸ்தாபனத்தில் நன்கு பயிற்சிபெற்ற பெண்களாலேயே சிகையலங்காரம் செய்துகொள்ளலாம்.

**Asian Salon**



585 Parliament St., Toronto
Ontario
Tel. (416) 960 - 3235
Tel. (416) 960 - 3566

1233 Ellesmere Road
Scarborough, Ont.
Tel. (416) 757 - 8002

# துவாரகைஸ்

மலிவு!
தரம்!!
குணம்!!!
சுவை!!!!

இலங்கை — இந்திய — கனேடிய உணவுப்பொருட்களையும், இறைச்சி வகைகள், பழவகைகள், உடன் மரக்கறி வகைகள் என்பனவற்றையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தெளிவான முறையில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட தமிழ் — மலையாள திரைப்படங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தமிழ்த் திரைப்படங்களின் தரமான ஒலிப்பதிவு நாடாக்களையும் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**PRINCESS PLAZA**

1670, Victoria Park Ave. - Toronto
Tel. [416] 757 - 1091




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணைத் தேடும் மனசு!

**க. கருணாநிதி**

ஊரினில் மூச்சுவிட்ட காற்றே
ஊர்விட்டு துரத்தியது வதைத்து
வேர்விட வந்தேன் சொந்த
பேர்விட்டு வேறுபேர் வைத்தேன்
நேர்வழி மாறியே வந்தேன்
பார்வழி வான்வழி மாறியே
விதேசி ஆகவே வந்து
பரதேசி ஆனேனே இன்று

முதுமை திரும்பும் இளமைக்கு
இளமை விரும்பும் முதுமைக்கு
இளமை தனிமை தண்மை
இதைவிட இல்லை கொடுமை
இரவுகள் ஈரமாய் போய்விட
இளமையும் கரைந்து போகவே
சீர்கெட்டு வாழ்வற்று வாலிபனாய்
பேர்கொண்டு வாழ்கிறேன் கனடாவில்

வந்தது வாழ்ந்தது தெரிந்தது
வயதது போனது எங்கே?
என்பது யாருக்கும் தெரியாது
எண்பது வயதிலும் புரியாது
முப்பதில் எல்லாம் சூனியமாய்
முதிர்ந்து போனேன் ஞானியாய்
மேற்கில் இருந்து பார்க்கின்றேன்
கிழக்கில் நடந்து திரிகின்றேன்

உணர்வுகள் செத்து சிதையாச்சு
உறவுகள் எனக்குப் பகையாச்சு
குளிரால் எலும்புகள் உக்க
கூதலால் காயமும் வெதும்ப
பாழும் மேனியில் வருத்தம்
வாழும் புவியில் இது வேண்டாம்
உயிரது பிரிந்து போவதற்குள்
ஊர்வர ஆசை மிகவுண்டு

உயர்த்த மறந்தேன் என்னை
உயர்த்த வந்தேன் உலகை
பட்டது துயரினி வேண்டாம்
பட்டது கடன்தான் அடைத்திட்டேன்
மண்ணைத் தேடுது மனசு
மனிதத்தைக் காண விழையுது
தேடுகிறேன் இன்னும் கிடைக்கவில்லை
தேடுவது என்னவெனத் தெரியவுமில்லை


ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

534-0011



534-0011

திருமணம், பதிவுத் திருமணம்
மற்றும் அனைத்து இந்துமத
கிரியைகள் சேவைக்கும்,
திருமணத்திற்குத் தேவையான
அனைத்து தேவைகளுக்கும்
எம்முடன் தொடர்புகொள்ளவும்.

மண்டபம் — முத்துமணவறை — மண்டப அலங்காரம் — பூமாலை — சடைநாகம் — தலைப்பாகை — தலைநகை — பூசைப் பொருட்கள் — சைவ உணவு அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்வதற்கு எம்மை நாடுங்கள்.

இந்துமத குரு கனடிய திருமண பதிவு அதிகாரி
சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்
(Hindu Priest & Registrar)
243 MARGUERETTA STREET
TORONTO - ONT.
(Bloor & Lansdowne - Lansdowne Subway)
(416) 534 - 0011 & 750 - 7319





DOWNSVIEW LEARNING CENTRE

AT JANE & FINCH

1977 Finch Ave. West
# 201 - Downsview
Ontario M3N 2V3

தமிழ் — ஆங்கில மொழிகளில்
போதனை வகுப்புக்கள் உண்டு
Call
631 - 7397 / 746 - 8325




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர்கள் கைது!

# அரச படைகளின் அடாவடித்தனங்கள்!

## அடையாள அட்டை இல்லாதோரை கைது செய்து விசாரிக்க உத்தரவு!

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கலாம் என்று ஸ்ரீலங்கா பொலிஸாரும் படையினரும் சந்தேகிப்பதால் தேடுதல் வேட்டையில் இறங்கியிருக்கின்றோம் என்ற போர்வையில் பல அடாவடித்தனங்களில் படையினர் ஈடுபட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 26 ம் திகதி மட்டும் மொரட்டுவை — இரத்மலானை — கல்கிசை — தெஹிவளை — வத்தளை — கந்தானை பகுதிகள் உட்பட கொழும்பிலும் இதரபகுதிகளிலுமாக 500 க்கும் மேற்பட்ட வட — கிழக்கு மற்றும் மலையக இளைஞர்கள் கைதாகியுள்ளனர்.

பொலிஸ் நிலையங்களில் தங்களைப் பதிவுசெய்துவிட்டு. வீடுகளில் வாடகைக்கு அறையெடுத்து தங்கியிருந்த இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குவார்கள்.

இரத்மலானை சொய்ஸாபுர தொடர்மாடி குடியிருப்பிலிருந்துமட்டும் இளைஞர்களும் யுவதிகளுமாக 22 பேர் கடந்த 26 ம் திகதி ஒரே இரவில் கைதாகியுள்ளனர். சில வீடுகளிலிருந்து தமிழர்களான வீட்டுச் சொந்தக்காரர்களும் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களும் எந்த தரத்தினராயிருந்தாலும் அவர்களை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொலிஸ் திணைக்களம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவில் 35 தமிழ் இளைஞர்களும் வெள்ளவத்தையில் 20 இளைஞர்களும் கொள்ளுப்பிட்டியில் 6 இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

கைதுசெய்யப்படுபவர்கள் அடையாள அட்டை இல்லாதவர்கள் மாத்திரமின்றி கொழும்பில் வந்து தங்கியிருந்து தமது சாதாரண கடமைகளைச் செய்பவர்களும் அடங்குவர்.

கைது செய்யப்படுவோர் தேசிய புலனாய்வு பணியகத்தினதும் குற்றப் புலனாய்வு பணியகத்தினதும் சிபார்சுக்கு அமை— யவே விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் இவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் அப்பாவித் தமிழர்களின் கைது காரணமாக தமிழர்கள் மத்தியில் பதட்டமான சூழ்நிலைகள் நிலவிவருவதாகத் தெரியவருகின்றது.

A - PLUS

Printing Services

தரமான தமிழ் — ஆங்கில அச்சுவேலைகளுக்கு நீங்கள் என்றும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டிய ஸ்தாபனம்.

22 Melham Court - # 9
Scarborough - Ontario M1B 2T7
Bus: (416) 291 - 1920
Res: (416) 321 - 3357

## தீரத்துடன் தப்பியோடியவர்!

சென்னை சைதாப்பேட்டை சிறையிலிருந்து மர்மமான முறையில் கடந்தவாரம் தப்பியோடிய ராஜீவ்காந்தி கொலை வழக்கின் முக்கிய சாட்சியான 28 வயது நிரம்பப்பெற்ற சார்ள்ஸ் நவாஸ் என்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய புள்ளி என்று இந்தியப்பத்திரிகைகள் செய்திவெளியிட்டு வருகின்றன. பொட்டு அம்மான் தலைமையில் இயங்கும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் இவர் முக்கிய உறுப்பினர் என்றும் இப் பத்திரிகைகள் கூறியிருக்கின்றன.

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட ஓரிரு நாட்களில் விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் சுற்றிவளைக்கப்பட்டபோது முதலில் கைதானவர் சார்ள்ஸ் நவாஸ்தான் என்றும் அச்செய்திகள் கூறுகின்றன.

சைதாப்பேட்டை சிறைக்கு வெளியே பலத்த காவல் போடப்பட்டிருந்தாலும் சிறைக்குள் ஒரு வராந்தாவில் சார்ள்ஸ் நவாஸ் விடப்பட்டதாகவும் சிறை சுவரில் ஏறி இவர் குதித்து தப்பியிருக்கலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. சார்ள்ஸ் நவாஸ் திருகோணமலையில் முள்ளிப்பொத்தானையில் பிறந்தவர் என்றும் இவரது தாய் மற்றும் உறவினர்கள் இன்றும் திருகோணமலையில்தான் வசிக்கின்றார்கள் எனவும் தமிழ்நாடு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுவருகின்றன.

இதுஇவ்விதமிருக்க தப்பியோடிய விவகாரம் தமிழக அரசியலில் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளன. இதுபற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா கருத்துத் தெரிவிக்கையில் —

"பொலிஸ் காவலிலிருந்து இலங்கைப் போராளிகள் தப்பி ஓடுவதற்கு தமிழக அரசு மீது பழி போட மத்திய உளவுத் துறை சதி செய்வதாக எனக்கு சந்தேகம் உள்ளது" — என்று தமிழக முதல்வர் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இராமர் உண்மையில் எங்கு பிறந்தார்?

## கலைஞர் தரும் புது விளக்கம்!

"விரைவில் தேர்தல் வரும். தமிழ் நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியை அகற்றும் காலம் நெருங்கிவிட்டது" — என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறினார்.

தேனியில் நடைபெற்ற தி.மு.க. நிதி அளிப்பு பொதுக்கூட்டத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது —

"பாரதீய ஜனதா மத்தியில் ஆட்சியைப்பிடிக்க இன்று திட்டமிட்டு செயற்பட்டுவருகின்றது. அதற்கு அயோத்தி ராமர் பெயரைச் சொல்லி வந்துவிடலாம் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். பாரதீய ஜனதா ஆட்சிபுரியும் மத்திய பிரதேசத்தில் ஊழல், வன்முறை அவர்களாலேயே தூண்டப்பட்டுவருகின்றது.

மத்திய பிரதேசத்தில் ஒரு தொழிற்சாலையைக்கட்ட பாரதீய ஜனதா அரசு, ஆதி திராவிடர் மக்கள் வாழும் பகுதியைத் தேர்ந்து எடுத்தது. ஆனால் அந்தப் பகுதியைவிட்டு வேறு பகுதியில் கட்டலாம் என்று ஆதிதிராவிடர் மக்களுக்காகப் பாடுபட்டுவரும் ஒரு ஓய்வுபெற்ற முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி கருத்துத் தெரிவித்தார். அவ்வளவுதான்... அவரைப்பிடித்து... அடித்து... உதைத்து... குண்டர்களால் அவருக்குச் செருப்பு மாலை போட்டு தெருவால் அழைத்துவந்தனர்.

அங்கே அப்படி என்றால், பாரதீய ஜனதா ஆட்சி புரியும் மற்றொரு மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் வன்முறை தலைவிரித்தாடுகிறது. அங்கு இவர்களே மீண்டும் அயோத்திப் பிரச்சினையைத் தூண்டி வன்முறையை கட்டவிழ்த்துவிடுகிறார்கள்.

அவர்கள் கூற்றுப்படியே ராமர் வாழ்ந்தது 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாகும். அப்போது ராமர் எங்குவந்தார் என்று அத்வானியிடமும், பாரதீய ஜனதாவிடமும் தான் கூறிவிட்டுச் சென்றார் போலும்!

பாபர் மசூதியை இடித்துவிட்டுத்தான் ராமர் கோவில் கட்டுவோம் என்கிறார்கள்.

தசரதனுக்கும் கோசலைக்கும் தலைப்பிள்ளையாகப் பிறந்தவர் ராமர் என்று புராணம் கூறுகின்றது. பொதுவாகத் தலைப்பிரசவத்தை மகளிர் தங்களது பெற்றோர் வீட்டில்தான் வைத்துக்கொள்வார்கள். அப்படிப்பார்க்கும்போது கோசலை தனது தந்தையின் நாடான கோசலைக்குத்தான் சென்றிருப்பார். அங்குதான் ராமரும் பிறந்திருக்கமுடியும்.

அயோத்தி பிரச்சினையை வைத்துக்கொண்டு இந்தியாவில் இந்துக்களுக்கு தாங்கள்தான் ஆதரவாக இருக்கின்றோம் என்று ஒரு மாயயை உருவாக்கி இந்து — முஸ்லிம் கலவரத்தைத் தூண்டிவிடுகின்றார்கள். மத நம்பிக்கை உள்ள இந்துக்களை தங்கள் பக்கம் இழுத்து காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள், ஜனதாதளம், தி.மு.க. போன்ற கட்சிகளுக்கு எதிராக மத்தியில் ஆட்சி அமைக்கலாம் என்று கருதுகின்றார்கள். அவ்வெண்ணம் தவறானது என்பதை அவர்கள் கூடிய கெதியில் புரிந்தகொள்வார்கள்.

**நன்மை செய்தவர்க்கு நன்மை செய்யாதிருப்பது மனித குணத்திற்கு மாறுபாடு. நன்மை செய்தவர்க்குத் தீமை செய்வது பேய்க்குணமாகும்.**

*– சுவாமி விவேகானந்தர் –*


ஜி.எஸ். பூட் மாக்கற்

**1077 Midland Ave. - Scarborough**
**(Between Eglinton & Lawrence)**

G.S. FOOD MARKET

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள், மரக்கறி, பால், பழ வகைகள், உடன் இறைச்சி வகைகள், கடலுணவுப் பொருட்கள் என்பனவற்றுடன் உங்கள் அன்றாடத்தேவைகளை குறைந்த செலவுடன் பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

**For Your Indian, Srilankan & Canadian *Food Items***

**288 - 0649**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருவி

**அருவி 39 | யூன் 1993**


## ஸ்ரீ கௌரி மங்கள சேவை

2 8 5 - 0 9 7 4



2 8 5 - 0 9 7 4

கல்யாணமண்டபம் – மணவறை –
பந்தல் அலங்காரம் – பூமாலை –
ஆண்டாள் மாலை – சடை நாகம் –
தலைப்பாகை – தலைநகை –
பூஜைக்குரிய பொருட்கள் இவை
அனைத்தையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து இந்துமத
கிரியைகளை வேதாகம
விதிப்படி
செய்துகொள்வதற்கும்,
திருமணத்திற்குத் தேவையான
அனைத்துத் தேவைகளைப்
பெற்றுக்கொள்வதற்கும்
தொடர்பு கொள்ளுங்கள்.

சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
(Hindu Priest & Registrar)
84 BERTRAND AVENUE
SCARBOROUGH
**(416) 285 - 0974**

**Jane & Finch**
சந்திப்பில்
புதியதொரு தமிழ் வாத்தக நிலையம்

# யல்னாஸ்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான இலங்கை –
இந்திய உணவுப்பொருட்கள், உடன் இறைச்சி வகைகள்,
கடல் உணவு வகைகள் – மரக்கறி, பழ வகைகள்,
பத்திரிகைள் சஞ்சிகைகள் யாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

## JAFFNA'S VARIETY
1911 FINCH AVE. WEST
(Jane & Finch Mall)
**TEL. (416) 633 - 2412**
**FAX. (416) 633 - 0207**

## SARAVANA DESIGN WORKS

உங்கள் வியாபார
நிலையங்களை அழகுற
அமைத்திடவும்
நவீனமயப்படுத்தவும்,
தாயகத்தை நினைவுகூரும்
வீட்டுத் தளபாடங்களை
அமைத்திடவும் தொடர்பு
கொள்ளுங்கள்

**(416) 602 - 6412**
180, FINCHDENE SQ. - # 5
SCARBOROUGH

## COLOMBO FOOD

M I

சர்வதேச உணவுப் பொருள் சிறப்பு அங்காடி
**PHOTOCOPY & FAX SERVICES**

**2823 EGLINTON AVE. EAST, SCARBOROUGH**
**TEL: (416) 265 - 1265 Fax: (416) 265 -**

தரமான இலங்கை, இந்திய,
கனேடிய உணவுப் பொருட்கள்,
உடன் ஆட்டிறைச்சி, மாட்டி
றைச்சி, கோழி இறைச்சி மற்றும்
மீன் — நண்டு — றால் போன்ற
கடலுணவு வகைகள், உடன்
மரக்கறி வகைகள், பழவகை கள்,
பால் உணவு வகைகள்,
போன்றவற்றை நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org